விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-6912)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 27 வெள்ளிக்கிழமை (12.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

## அரசுக்கு எதிரான அவநம்பிக்கைப் பிரேரணை
# கூட்டமைப்பின் ஆதரவினால்
# ரணில் அரசு தப்பியது
## ஆதரவாக 92 : எதிராக 119

(கொழும்பு)

ரணிலின் ஐ.தே.க அரசுக்கு எதிராக ஜே.வி.பியினால் கொண்டு வரப்பட்ட அவநம்பிக்கைப் பிரேரணை கூட்டமைப்பின் ஆதரவுடன் 27 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. 23

## பாராளுமன்ற தெரிவுக்குழு
### புலனாய்வாளர்களிடம் இன்று விசாரணை

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு இன்று புலனாய்வு அதி 23

## மீண்டும் அமைச்சு பதவியை ஏற்க
### முஸ்லிம் எம்.பிகள் முடிவு

(கொழும்பு)

இராஜினாமாச் செய்த 9 முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் தங்கள் அமைச்சுப் பதவியை ஏற்க தீர்மானித்துள்ளதாக தக வல்கள் தெரிவிக்கின் றன.

பாராளுமன்றதில் நேற்று வியாழக் கிழமை 23

## அரசை கவிழ்த்துவிட்டு என்ன செய்யப் போகின்றோம்
### சபையில் சம்பந்தன் கேள்வி

(கொழும்பு)

இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 23

## அவநம்பிக்கை பிரேரணையை பயன்படுத்தி ரணிலிடம் கூட்டமைப்பு பெற்ற வாக்குறுதி

- கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல்
- கன்னியாவில் பிள்ளையார் ஆலயம் உடைப்பை நிறுத்தல்
- ஓமந்தையில் தனி சிங்கள பிரதேச செயலகத்தை நிறுத்தல்

23

## தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சை
மேல்மாகாண மாதிரி வினாத்தாள்
உள்ளே...
புதன், வெள்ளி தொடர்ந்து வெளிவரும்

## எமது பிள்ளைகளுக்கு இராணுவமே பொறுப்பு
### காணாமல்போனவர்களின் உறவுகள் தெரிவிப்பு

(வவுனியா)

எமது பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்து அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பொறுப்பை இராணுவமே ஏற்கவேண்டும் என வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் 23

### தமிழ் மக்களுக்கான கூட்டணியை
## அனைவரையும் இணைத்தே உருவாக்க வேண்டும்
### நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்குள் ஒரு கூட்டணி உருவாகுமானால் அது அனைத்து தரப்பி 23

## கப்பம் கொடுத்தே ரணில் வெற்றி பெற்றார் – ஜே.வி.பி

(கொழும்பு)

கல்முனை வடக்கு பிரதேச சபை விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுத்து மூலம் சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு உத்தரவாதம் கொடுத்தே அவர்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டார். ரணில் விக்கிரமசிங்க வழமைபோன்று கப்பம் கொடுத்தே நம்பிக்கையில்லா பிரேரணையை 23

## அழுகிய நிலையில் பெண்ணின் சடலம்
### யாழில் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குழி காட்டு கந்தோர் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து அழுகிய நிலையில் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக் 23

## வாக்குறுதியை பாதுகாக்கவே அரசுக்கு ஆதரவாக வாக்களித்தோம்
### ரிஷாத் பதியூதீன் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் உள்ளடக் 23

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express
(C-6874)
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
ஹரிகணன்
021 222 2737
வடக்கின் அச்சகதாரர்

## மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் நாளை சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ் வரம் சிவன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை சங் காபிஷேகம் நடைபெறவுள் ளது.

நாளை காலை 9.00 மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடை பெறும்.

சங்காபிஷேக கிரியைகளை சிவஸ்ரீ த.சிவதர்சன் குருக் கல் நடத்திவைப்பார். (3)

## மரண தண்டனைக் கைதி பட்டப்படிப்பை நிறைவு செய்தார்

(யாழ்ப்பாணம்)

மரண தண்டனை விதிக் கப்பட்ட உப பொலிஸ் பரி சோதகர் இந்திக்க யமுன சிங்க என்ற சிறைக்கைதி பட்டப்பின் படிப்பிற்கான சான்றிதழைப் பெற்றுள் ளார்.

வெலிக்கடைச் சிறைச் சாலையில் இருந்து உயர் தரத்திற்கு தோற்றி ஸ்ரீ ஜெய வர்த்தனபுர பல்கலைக் கழ கத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

பின் பட்டப்பின் கற்கைக் காக களனி பல்கலைக்கழ கத்தை தேர்வு செய்து சிறை யில் இருந்தபடியே தனது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து எம்.ஏ பட்ட தாரியாகச் சித்தி அடைந் துள்ளார்.

இவர் பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகரான முஹமட் ஷியாமின் கொலை வழக்கின் கீழ் இவருக்கு மரண தண்டனை விதிக் கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (ம-10)

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஐவர் வைத்தியசாலையில்

### புதுக்குடியிருப்பு பகுதியில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு பிரதேச செயலக வளா கத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் புதுக் குடியிருப்பு ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். இச்சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

நேற்று மதியவேளை புதுக்குடியிருப்பு பிரதேச செய லக வளாக கட் டடத் தின் முன்பக்கத்தில் இரண்டு குள விக் கூடுகள் தென்பட்டன.

அதில் ஒன்றுகலைந்து அங்கு சென்ற மக்கள் மற்றும் அரச உத்தி யோகத்தர் மீது குத்தியுள்ளன.

இத னால் அதில் நின்ற மக்கள் கலைந்து சென்று பாதுகாப்பாக கட்டடங்களுக் குள் புகுந்துகொண்டனர்.

இதில் பாதிக்கப்பட்ட மக் கள் உடனடியாக பிரதேச செயலக ஊர்தியில் புதுக்குடி யிருப்பு மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்லப்பட்டு அங்கு ஐவரும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின் றனர்.

குளவிக்கொட்டிற்கு அரச உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் காவலாளி ஒருவர் உள்ளிட்ட ஐந்து பேர் பாதிக்கப் பட்டுள்ளார்கள். (ம-3,281)


### பகிரங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பாவனைக்குதவாத தளபாடங் கள் எதிர்வரும் 30.07.2019ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். பொருள்களை ஏலத்தில் பெறுபவர் பணத்தை கட்டி உடனடியாக அவற்றை அப் புறப்படுத்த வேண்டும்.

| | |
|---|---|
| கணினி கதிரை - 4 | Mouse - 1 |
| பிளாஸ்ரிக் கதிரை - 20 | Speaker - 1 |
| விரிவுரை மண்டப கதிரை - 4 | USP - 1 |
| பிறிண்டர் -1 | Keyboard - 1 |
| CPU - 6 | DVD writer - 2 |
| Keyboard - 2 | சுளகு - 2 |
| Headphone - 2 | கொத்துரொட்டித் தட்டு-1 |
| Epson LX Printer - 2 | படங்கு - 1 |
| DVD RW - 10 | மெத்தை - 14 |
| Keyboard, Mouse, USB - 4 | ஸ்ரீல் கபேட் - 18 |

(C-6945)

அதிபர் – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


## அமைச்சர் மனோகணேசன் ஞாயிறு யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக முன்னேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் நாளை மறுதினம் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ் வரும் அமைச்சர் ஞாயிற்றுக்கிழமை காலை அள வெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்பதுடன் யாழில் தெரிவு செய்யப்பட்ட ஆலயங் களுக்கான ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கும் நிகழ்விலும் பங்கேற்கிறார்.

16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி அந்த ணந்திடலில் அமையப்பெறும் யாழ் குடாநாட்டுக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் குளம் தொடர்பில் கள விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (ம-3.10)

## குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நிறைவேற்றுவதில் தவறில்லை

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைக் குள் இருந்து கொண்டு போதைப் பொருள் விற்பனையில் ஈடு பட்டு வரும் மிகப் பெரிய போதைப் பொருள் குற்ற வாளிகள் மீது சுமத் தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் சட்டத் திற்கு முன் நீதிமன்ற செயற் பாடுகளில் எந்த சந்தேகங்களும் இன்றி சாட்சியங் களுடன் நிரூபிக்கப் பட்டால், அவர்களுக்கு தூக்குத் தண்டனை யை அமுல்படுத்து வதில் எந்த தவறும் இல்லை என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள் ளார்.

இலங்கையில் 44 இலட்ச மான பாடசாலை பிள்ளை களின் வாழ்க்கையை முற் றாக அழிக்கும் இந்த போதைப் பொருள் வியாபாரிகளிடம் இருந்து எதிர்கால சந்ததியை எப்படி காப்பாற்றுவது என மரண தண்டனைக்கு எதி ராக பேசுவோரிடம் கேள்வி எழுப்புவதாகவும் அவர் கூறி யுள்ளார்.

கெஸ்பேவயில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன் றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட் டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத் தில் புதிய விதமான பயங்கர வாத தாக்குதலை நடத்திய வர்கள், அதற்கு உதவியாளர் களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதையும் இவர் கள் எதிர்க்கின்றனர். விடு தலைப்புலிகளுக்கு எதிராக போரை நடத்திய போது, அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கம், பயங்கரவாதி களை அழிக்க வேண்டாம் என முப்படையினருக்கு ஆலோசனை வழங்கியதா? என நான் கேள்வி எழுப்பு கிறேன்.

அப்படியான ஆலோ சனை வழங்கியிருந்தால், புலிகளின் பயங்கரவாதம் இன்று வரை தொடரும் எனவும் சஜித் பிரேமதாச கூறியுள்ளார். (ம-3)


### வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் ஆண், பெண் உடன் தேவை.

தொடர்புகளுக்கு :

077 748 8093, 077 466 1237

(9566)

### கடை விற்பனைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் 03 மாடிகொண்ட 3300 சதுர அடி யுடைய நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடம் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :

077 287 0223

(C-6939)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து-700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-6917)

### மணிவிழாக்காணும் திரு.கார்க்கண்டு செல்வச்சோதி

(ஆசிரியர், யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை)

12.07.2019



எங்கள் ஊரின் கணிதப் பேராசான்
கணித நிபுணர்கள் பலரை உருவாக்கிய பெருந்தகை
கேத்திர கணிதத்தின் கேந்திர நிலையம்;
அட்சரகணிதத்தின் அட்சயபாத்திரம்;
எண் கணிதத்தின் ஏறுமுகன்; இப்படி ஏராளம்
எங்கள் கணிதப் பேராசானை
வாழ்க வாழ்கவென வாழ்த்தி மகிழ்கிறோம்.

(C-6944)

வாழ்த்துவோர் : மணிவிழாக்குழுவினர்

### குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

**தமிழகத்திலிருந்து** வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பலதரப்பட்ட வர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் அருள்நிதி **காஞ்சிநாதன்** அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

(C-6946)

காலம் : 13.07.2019 சனிக்கிழமை தொடக்கம் 19.07.2019 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள் : **மனவளக்கலை பேராசிரியர் காஞ்சிநாதன்**

**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

அகத்தாய்வு 2ஆம் நிலை 13.07.2019 சனிக்கிழமை மற்றும் 14.07.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.இல : 021 222 2772**

# மகிந்த தரப்பினரே அரசாங்கத்தை பாதுகாத்தனர்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வதற்காக கட்சி தாவியவர்களே அரசாங்கத்தைப் பாதுகாத்தனர் என தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அரசாங்கத்தை பாதுகாத்ததாக ஜே.வி.பி. மீது மகிந்த தரப்பினர் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்றது. குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையடுத்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை கொண்டு வந்தமை அரசாங்கத்தை பாதுகாக்கவே என எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

மகிந்த அணியினர் இவ்வாறு கூறுவது தவறான விடயம். மகிந்த தரப்பினரே அன்று பிரதமர் ரணிலின் பதவியை பாதுகாத்து கொடுத்தனர். குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே அன்று பிரதமர் ரணிலுக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து அவரைப் பாதுகாத்தனர்.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ சார்பாக போட்டியிட்டு அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்ட அவர்களே அன்று ரணிலைப் பாதுகாத்தனர். இதன் பின்னர் அவர்களே ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பின்போது . மகிந்தவுக்கு மறுபடியும் ஆதரவு தெரிவித்தனர்.

மேலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக ஒவ்வொருவரையும் தனி அறையில் சந்தித்துக் கலந்துரையாடி ஆதரவு தாருங்கள் என கோரிக்கை விடத் தேவையில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணை எதற்காக கொண்டுவரப்படுகின்றது என்பதை புரிந்துகொள்ளும் முகமாக தமிழ், சிங்களம் ஆங்கில மொழிகளில் பிரதிகளை வழங்கியிருந்தோம்.

உங்களுக்கு விருப்பம் என்றால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களியுங்கள். அரசாங்கத்தை பாதுகாக்க எண்ணவில்லை என்றால் கடந்த ஆட்சிக் கவிழ்ப்பின்போது எதிராக வாக்களித்த 97 நாடாளுமன்ற உறுப்பினர்கள்ளையும் கொண்டுவாருங்கள்.

மேலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடித்தாலும் அதில் உள்ள விடயங்களை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என அரசாங்கத் தரப்பினர் கூறுகின்றனர். இதுவே எமது வெற்றி. இதிலேயே நாம் வெற்றிபெற்று விட்டோம்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்கு வாக்களிக்க இடம்கொடுக்க வேண்டும். நல்லதொரு நாடாளுமன்றத்தை உருவாக்க அவர்களுக்கு வாய்ப்பினை வழங்க வேண்டும்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒரு பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் அரசாங்கத்தை பாதுகாக்கக் கூடாது. இந்த நிலை வடக்கு- கிழக்கிற்கும் பின்னர் ஏற்படலாம்.

மேலும் பாதுகாக்கக் கூடிய அரசாங்கமாக இந்த அரசாங்கம் இல்லை. இந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் பயணிக்க ஒருபோதும் இடமளிக்கக் கூடாது" என மேலும் தெரிவித்தார். (7-9)

# பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல்

(கராச்சி)

கராச்சியிலிருந்து போதைப் பொருட்களை ஏற்றிய இரண்டு படகுகள் இலங்கைக்கு வந்து கொண்டிருப்பதாக இந்தியா விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து இலங்கை கடற்படையினர் அந்த இரண்டு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் என இந்திய செய்திச்சேவையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் கராச்சியிலிருந்து இலங்கை நோக்கி சென்று கொண்டிருந்த படகுகள் குறித்து இலங்கை அதிகாரிகளை எச்சரித்ததை தொடர்ந்தே அந்த படகுகள் கைப்பற்றப்பட்டன என இந்திய செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் இந்திய அதிகாரிகளிற்கு வழங்கிய தகவல்களை அவர்கள் இலங்கை அதிகாரிகளிற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து எல்லை பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து இரு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த போதைப்பொருள் வர்த்தகத்தில் ஐ.எஸ். அமைப்பு ஈடுபட்டுள்ளது. அவர்களிற்கு இதன் மூலமே வருமானம் கிடைக்கின்றது என இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி இலங்கையில் தீவிரவாத கொள்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நிதியை பெற்றுக்கொள்கின்றனர் எனவும் இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருட்களை கடல் வழியாக கடத்துவதே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பானதாக காணப்படுகின்றது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (9)

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் ரிஷாத்துக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சதொச விற்பனை நிலையத்தின் மூலம் பல்வேறு ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் டி.வி.சானக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் நேற்று வியாழக்கிழமை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாடளிப்பதற்கு முன்னர் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் தெளிவுபடுத்திய பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவிக்கையில்,



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு சொந்தமாக நாடளாவிய ரீதியில் 42 நிறுவனங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் ஒன்றான சதொச விற்பனை நிலையத்தின் மூலம் பல்வேறு ஊழல்கள் இடம்பெறுகின்றன.

அத்தோடு ரிஷாத்துக்கு சொந்தமான தனியார் நிறுவனமொன்றில் தொழில் செய்யும் 52 ஊழியர்களுக்கு சதொச நிறுவனத்திற் கூடாகவே சம்பளம் வழங்கப்படுகின்றது. இது மாத்திரமின்றி ரிஷாத்துக்கு சொந்தமான தனி யார் தொலைக்காட்சியொன்றின் ஊழியர்களுக்கு அரச நிதியிலிருந்தே சம்பளம் வழங்கப்படுகிறது.

இவற்றுக்கான ஆதாரங்கள் அனைத்தும் எம்மிடம் உள்ளன. அந்த ஆதாரங்களுடனேயே இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் அவருக்கு எதிராக முறைப்பாடளித்துள்ளோம்.

ரிஷாத் பதியுதீன் மாத்திரமல்ல தற்போது அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கின்ற 30 அமைச்சர்களில் 20 பேர் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். இவை தொடர்பிலும் வெகுவிரைவில் வெளிப்படுத்துவோம் என மேலும் தெரிவித்தார். (7-9)

# வக்கற்ற அரசின் மீது நம்பிக்கை வைப்பவர்கள் முட்டாள்கள்-வியாழேந்திரன்

(கல்முனை)

தமிழ் தலைமைகள் அரசாங்கத்தால் ஏமாற்றப்படவில்லை. மாறாக அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு தமிழ் தலைமைகள் தான் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைத் தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்களாகியும் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத வக்கற்ற அரசாங்கத்தின் மீது இனியும் நம்பிக்கை வைப்பவர்கள் முட்டாள்களே என பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,


கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கு இணங்கிய கடந்த வரவு - செலவு திட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவளித்தது.

ஆனால் ஒரே இரவில் வர்த்தமானியில் வெளியிடக்கூடிய இந்த சிறிய விடயத்தைக் கூட செய்யாமல் அரசாங்கம் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் போதும் இதே போன்று தான். வழங்கிய வாக்குறுதிகளையும் எவற்றையுமே நிறைவேற்றவில்லை.

எனவே இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி கொண்டு சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதில் எந்த தவறும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# புகையிரதம் மோதி இளைஞன் உயிரிழப்பு



(நெளுக்குளம்)

வவுனியா புதூர் புளியங்குளம் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற புகையிரத விபத்தில் சிக்கிய இளைஞன் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி அநுராதபுரம் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி புகையிரதம் புதூர் ஆலயப் பகுதியிலிருந்து பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் மீது புகையிரதம் மோதியுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் சிறிது நேரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (9-299)

# ஆளும் - எதிர்க்கட்சிகள் இணைந்து பயங்கரவாதத்தை தடுக்க வேண்டும்

## சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவதில் அர்த்தமில்லை.

ஆளும் எதிர்க்கட்சிகள் இணைந்து ஒன்றாக பயங்க்ரவாத செயற்பாடுகளை தடுக்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமர், அரசாங்கம் மற்றும் அமைச்சரவைக்கு எதிராக ஜே.வி.பி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையின் சாராம்சம் என்னவெனில் இந்த பயங்கரவாத தாக்குதல் மற்றும் அதன் பின்னர் அரசாங்கம் சரியாக செயற்படவில்லை என்பதேயாகும்.

உண்மையில் இந்த சம்பவம் அரசாங்கதின் பலவீனத்தை காட்டுகின்றது. தவறுக்கு அரசாங்கமாக நாம் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆனால் இதற்கு தீர்வு அரசாங்கத்தை வீழ்த்துவதா அல்லது அனைத்து கட்சிகளும் இணைந்து இந்த பயங்கரவாதத்தை இல்லாது ஒழிப்பதா என்பதை சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (7)




# உலகே 'மாயம்' ஆஸி., 'சோகம்'

## றொப் ஓர்டர் சரிவால் ஏமாற்றம்

## இறுதியில் இங்கி., - நியூசி., மோதல்



அரைச்சதம் அடித்த இங்கிலாந்தின் ஜேசன் ரோய்

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் இறுதிகட்டத்தை எட்டி உள்ளது. இந்திய அணியை வீழ்த்திய நியூசிலாந்து முதல் அணியாக இறுதிக்கு முன்னேறி விட்டது.

பேர்மிங்காமில் நடந்த இரண்டாவது அரை யிறுதியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்தி ரேலிய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

'வேகத்தில்' ஆபத்தான வோர்னர் (9) சிக்க, அவுஸ்திரேலிய அணி ஆட்டங்கண்டது. கவாஜாவுக்குப் பதில் வந்த ஹேண்ட்ஸ்கோம்ப் (4) ஏமாற்ற, 14 ரன்களுக்கு 3 விக்கெட்டை இழந்து தடுமாறியது. ஸ்ரீவ் ஸ்மித், அலெக்ஸ் கரி பொறுப்புடன் விளையாடினர். இவர்கள், அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

**ஸ்மித் அரைச்சதம்**

ரஷித் 'சுழலில்' கரி (46), ஸ்டாய்னிஸ் (0) ஆட்டமிழந்தனர். ஸ்மித் அரை சதம் கடந்தார். மக்ஸ் வெல் (22) ஒரு சிக்சர் விளாசிய



மிட்சல் ஸ்ரார்க்

தது. இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக வோக்ஸ், ரஷித் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

**ஜேசன் விளாசல்**

இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய், பேர்ஸ்டோவ் ஜோடி 'சுப்பர்' ஆரம்பம் தந்தது. இருவரும் மாறி மாறி பவுண்டரிகள் விளாசினர். முதல் விக்கெட் டுக்கு 124 ஓட் டங்கள் சேர்த்த போது, பேர்ஸ் டோவ் (34) ஆட்டமிழந்தார். அபாரமாக விளையாடிய ஜேசன் அரை சதம் விளாசினார். ஆனால், 85 ஓட்டங்களில் நடுவரின் தவறான தீர்ப்பால் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் மோர்கன், ஜோ ரூட் இணைந்து வெற்றியை



ஆஸியின் முன்னணி விக்கெட்டுக்களை பறித்தெடுத்த இங்கிலாந்தின் கிறிஸ் வோக்ஸ்

**ஸ்ரார்க் சாதனை**

ஒரு உலக கிண்ணத் தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் மிட்சல் ஸ்டார்க் படைத்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பேர்ஸ்டோவை (34) ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் சாதனைக்கு சொந்தக்காரரர் ஆனார்.

இதன்மூலம் இந்த உலக கிண்ணத் தொடரில் 27 விக்கெட் வீழ்த்திய ஸ்டார்க், ஒரு உலக கிண்ணத் தொடரில் அதிக விக்கெட் வீழ்த் திய பந்துவீச்சாளர் என்னும் சாதனை படைத்துள்ளார். இவருக்கு அடுத்த இடங் களில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் (26 விக்., 2007), இலங்கையின் சமிந்த வாஸ் (23 விக்., 2003) உள்ளனர்.

உலக கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிக்கு இங்கிலாந்து அணி ஜோராக முன்னேறியது. அரை யிறுதியில் ஐந்து முறை கிண்ணம் வென்ற அவுஸ்திரேலிய அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

**அதிர்ச்சி ஆரம்பம்**

அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத் தி லேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஆர்ச்சர் வீசிய இரண்டாவது ஓவரில் அணித் தலைவர் பின்ச் டக் அவுட்டானார். வோக்ஸ் திருப்தியில் கிளம்பினார். வோக்ஸ் 'வேகத்தில்'ஸ்மித் (85), ஸ்டார்க் (29) சிக்கினார்.

அவுஸ்திரேலிய அணி 49 ஓவர் களில் 223 ஓட் டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலகுவான இலக்கை துரத்திய இங்கிலாந்து அணியினர் அதனை எளிதாக்கினர். மோர் கன் பவுண்டரி அடிக்க, இங்கி லாந்து அணி 32.1 ஓவரில் 2 விக் கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரூட் (49), மோர் கன் (45) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஜூலை 14ல் லோர்ட்சில் நடக்கும் இறுதியில் இங்கி லாந்து, நியூசிலாந்து மோதுகின் றன. இதில் வெல்லும் அணி புதிய உலக சம்பியனாக உருவெடுக்கும்.



அலெக்ஸ் கரி

**ரத்தம் கொட்டியது**

ஆர்ச்சர் வீசிய 8வது ஓவரின் கடைசி பந்து, அவுஸ்திரேலியாவின் கேரி 'ஹெல்மெட்டில்' கடுமையாக தாக்கியது. வலது பக்க தாடையில் காயம் பட்டு ரத்தம் வழிந்தது. சிகிச்சை எடுத்துக்கொண்ட கரி துடுப்பாட்டத்தை தொடர்ந்தார். மீண்டும் ரத்தம் வழிந்து கொண்டிருந்த போதும் 46 ஓட்டங்கள் எடுத்தார்.

**முதல் தோல்வி**

அவுஸ்திரேலிய அணி உலக கிண்ண தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய 7 முறையும் வெற்றி பெற்றிருந்தது. நேற்று முதன் முறையாக அரையிறுதியில் வீழ்ந்தது.

**27**

உலக கிண்ண கிரிக்கெட் தொட ரில் 27 ஆண்டுக்குப் பின், இங்கிலாந்து அணி இறுதிக்கு முன்னேறி அசத்தியது. இதற்கு முன் அவுஸ்திரேலிய மண்ணில் (மெல்போர்ன்) நடந்த 1992 தொடர் பைனலில் பாகிஸ்தானிடம் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது இங்கிலாந்து.

**50**

உலக கிண்ணத் தொடரில் 100 ஓட்டங்களுக்கு அதிகமாக சேர்த்த 50வது அவுஸ்திரேலிய ஜோடி என்ற பெருமை ஸ்மித் - கரிக்கு கிடைத்தது.

**ரூட் அசத்தல்**

நேற்றைய போட்டியில், கம்மின்ஸ் பந்தை இங்கிலாந்தின் ரூட் கேட்ச் பிடித்தார். இதன் மூலம், ஒரே உலக கிண்ணத் தொடரில் அதிக பிடி (12) எடுத்த வீரர் என்ற பெருமை பெற்றார். இதற்குமுன், 2003ல்அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்ரிங் 11 பிடி எடுத்தார்.

◈ உலக கிண்ண அரங்கில் அதிக பிடி எடுத்தவர்கள் பட்டியலில், ரூட் (19) இரண்டாவது இடம் பிடித்தார். முதலிடத்தில் ரிக்கி பொன்ரிங் (28) உள்ளார்.

## ஹோலியை சீண்டிய வோகன்





உலக கிண்ண தொடரின் அரையிறுதியில் இந்திய அணி, நியூசிலாந்திடம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த நியூசி., அணி 239 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் களமிறங்கிய இந்திய அணி 221 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்து கிண்ண வாய்ப்பை இழந்தது.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மைக்கல் வாகன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ஹோலியை கிண்டல் செய்து ஒரு பதிவை போட்டுள்ளார். அதில், ஹோலி ராஜா வேடம் போட்டு அமர்ந்திருக்கும் போட்டோவை, ஹோலியின் கையில் விமான பயண சீட்டை வைத்திருப்பது போன்று 'எடிட்' செய்து கேப்சனில் 'டிக்கெட் ப்ளீஸ்' என்ற வார்த்தைகளுடன் பதிவிட்டுள்ளார்.

# பிணைமுறி குற்றவாளிகளை ஜனாதிபதி காப்பாற்றினார்

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

பிணை முறி மோசடிகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே காப்பாற்றினார் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றிருந்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலான கோப்குழு அறிக்கை வெளியிடப்படவிருந்த நிலையில் தலை வர்களை காப்பாற்றும் நோக்கில் அன் றைய தினம் நாடாளுமன்றம் கலைக் கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையினால் பல்வேறு விடயங்கள் மூடிமறைக் கப்பட்டது என மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (7)

# ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் உதயமான புதிய தேசியக் கூட்டணி

## ஒப்பந்தம் கைச்சாத்து



(ஹற்றன்)

மலையகம், வடக்கு மற்றும் மேல்மாகாணம் அடங்கலாக புதிய தேசிய கூட்டணி ஒன்று கொட்டகலையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இந்த கூட்டணி அமைப்பதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டது.

கொட்டகலை தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன், ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் இ.கதிர் ஆகியோர் தலைமையிலான குழுவினர் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களை தவிர்ந்த ஏனைய சமூகத்தினருக்கு கிடைக்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த தேசிய கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன்போது இந்த தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கக்கூடிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றின் பொதுச்செயலாளர்கள் இணைந்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். (7)


## யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும் மாபெரும் மோட்டார் சைக்கிள் பவனி

**காலம் - 13.07.2019 சனிக்கிழமை**

யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும் மாபெரும் மோட்டார் சைக்கிள் பவனி பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கொடிகாமம், உரும்பிராய், தெல்லிப்பழை, காரைநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கூட்டுறவு நிறுவனங்களின் முன்றலில் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இப்பவனி அவ்வவ் வீதி வழியே காலை 9.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையும். தொடர்ந்து கூட்டுறவுச் சபை தலைவர் திரு.தி.சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.பொ.வாகீசன் அவர்கள் கலந்து கொள்வார்.

**அனைவரும் வருக!**
**கூட்டுறவில் இணைக!.**
**"கண்ணியமான சேவைக்கு கூட்டுறவுகள்"**

யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் (C-6941)

## மணிவிழா வாழ்த்துக்கள்

### திரு கார்க்கண்டு செல்வச்சோதி

**(ஆசிரியர், யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை)**




கணிதத்தில் ஆசானாகி
ஏற்றமுறு
ஆங்கிலத்தையும்
வசப்படுத்திக்
கொண்டதனால்
மாண்புறு மாணாக்கர்
பரம்பரையொன்று
அன்றும் இன்றும்
எளிதாய்த் தேடிவந்து
தமது அறிவுக்கண்களை
தெளிவாய்த்திறந்திட
வழி சமைத்த பெரியப்பா,
உங்களிற்கு இன்று
மணிவிழா நாள்
ஆயினும் உங்கள் பணி
என்றும் தொடர இம்
மணிவிழா நாளில்
வாழ்த்துகின்றோம்.

(C-6928)

"பிருந்தாலயா"
உடுப்பிட்டி.

அன்புடன் வாழ்த்துவோர்:பெறா மக்கள்
யோ.கீர்த்திகா, யோ.மதுரா, யோ.பிருந்தா

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 13 ½ சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc, M.ScEngineer<br>எதிர்பார்ப்பு:Doctor, Accountant (உள்நாடு)<br>தொ.இ: B/9886 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 15 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:BA, HNDM, Manager<br>எதிர் பார்ப்பு: அரசஉத்தியோகம் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/5534 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L,தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: A/L,அரசதொழில்<br>தொ.இ: B/9889 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 70 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:பட்டதாரிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்(உள்நாடு)<br>தொ.இ: G/5554 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 103 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc, Accountant, Qatar<br>எதிர்பார்ப்பு: A/Lற்குமேல் கல்வித் தகைமை (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9890 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 17 ½ செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:A/L,தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: சொந்ததொழில் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/5563 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 32<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Sc, Civil Engineer, Singapore<br>எதிர்பார்ப்பு: Accountant, Doctor, Lecturer, Bank, IT, B.Com &B.Scபட்டதாரி (உள்நாடு)<br>தொ.இ: B/9893 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 78 ¾ செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தக்கைமை/தொழில்:B.Scபட்டதாரிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: Engineer, B.Scபட்டதாரி அரசதொழில்(உள்நாடு)<br>தொ.இ: G/5566 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஸ்மாட் ஸ்ரீலங்கா பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர்- யுவதிகளுக்கு தொழில் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைய ஜனாதிபதி அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஸ்மார்ட் ஸ்ரீலங்கா (SMART SRILANKA) திட்டத்தின் யாழ்.மாவட்ட பயிற்சி நிலையத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் தலைமையில் யாழ். பிரதேச செயலக வளாகத்தில் நேற்று இடம் பெற்றது.

25 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள இந்த இரு மாடிக் கட்டடத்தொகுதி எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞர்- யுவதிகள் சரியான தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான ஒரு தளமாகவும் வழிகாட்டுவதற்கான ஒரு மத்திய நிலைய மாகவும் அமையும் எனத் தெரி விக்கப்படுகிறது.

இலங்கை முழுவதிலும் இதுவரை 6 மாவட்டங்களில் ஸ்மாட் ஸ்ரீலங்கா (SMART SRILANKA) செயற்றிட்டத்தின் பயிற்சி நிலையங்கள் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந் தச் செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்த்தன பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-101)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 11 ஆவது குருபூசை இன்று



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் பெருந் தலைவர்,அன்னை சிவத் தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி, பண் டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினொராவது ஆண்டு குருபூசை தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில், ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். (5)

# அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் 25.09.2019 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்படவுள்ள யா/வல்வை சிவகுரு வித்தியாசாலையின் (வகை - II) அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

1.இலங்கை அதிபர் சேவையில் தரம் 2, 3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.இலங்கை அதிபர்-சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3.வடமராட்சி வல்யத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6.இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

7.விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 29.07.2019 ஆகும்.

8.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ளமுடியும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (5)




# ஆறு வர்த்தகர்களுக்கு எதிராக 19 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றம் 19 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தது.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்ட 6 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கெதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்ட நிலையில் குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (5,10)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவ் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)

# யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் மோ.சைக்கிள் பவனியும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

97 ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வை முன்னிட்டு யாழ். மாவட்ட அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் இணைந்து நடத்தும் மாபெரும் மோட்டார் சைக்கிள் பவனி நாளை சனிக்ழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி 9 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையும்.

அந்தவகையில் ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்க முன்றல்,பருத்தித்துறை ப.தெ.வ. கூ. சங்க முன்றல்த உரும்பிராய் கற்பக விநாயகர் சி.க. சங்க முன்றல், கொடிகாமம் சந்தி. காரைநகர் ப.நோ.கூ சங்க அருகாமை, தெல்லிப்பழை ப. நோ.கூ. சங்க அருகாமை ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமாகும் மோட்டார் சைக்கிள் பவனியே வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன் கலந்து கொள்வார். (5)

# ஆங்கிலப்பட்டறை

(கொடிகாமம்)

போக்கட்டி அ.த.க பாடசாலையில் தரம் 2 மாணவர்களின் வாய்மொழி மூலமான ஆங்கிலப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் தி.அபரா ஜிதன் தலைமையில் நடை பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உத விக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் வலய பிரதிநிதியுமாகிய வி.மதிதரன் கலந்து கொள்வார். (5-114)

# நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை 13 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5மணியளவில் கதிர்காமசேகரம் திறந்த வெளி அரங்கில் கல்லூரியின் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு,அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மதியழுகன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-110)

# வீட்டுத்திட்ட கொடுப்பனவுகள் விரைவுபடுத்தப்படும்-பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் வீட்டுத்திட்டங்கள் மற்றும் புனரமைப்பு வீடுகளுக்கான முதற்கட்ட நிதிக் கொடுப்பனவுகள் விரைவாக வழங்கப்படும் என தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் எஸ். ரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த வீட்டுத் திட்டத்தின் மூலம் இவ் வருடம் (2019) சுமார் 2 ஆயிரம் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் ஆயிரத்து இருநூறு வீட்டுத் திட்ட வீடுகளுக்கான முதற்கட்ட நிதி வழங்கிய நிலையில் ஏனைய வீடுகளுக்கான முதற்கட்ட நிதி வழங்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-10)



யா/மகாஜன கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக 23 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற செல்வி.வே.பத்மலோசினியின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் ம. மணிசேகரம் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்-ஈச்சமோட்டை செய்தியாளர்)



ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் மாணவர் ஈருருளி தரிப்பிடத் திறப்பு விழா அண்மையில் ஆவரங்கால் இந்து விருட்சத் தலைவர் செ.தவராசசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. (படங்கள்-நல்லூர் செய்தியாளர்)

# விக்னேஸ்வரனுடன் இணைந்து கொள்கை வழி கூட்டு ஒன்று உருவாக்க தயாராக உள்ளோம்-கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தனித்துவமான இறைமை கொண்ட தேசத்தை உருவாக்குகின்ற கொள்கைவழி அரசியல் பயணத்தில் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளை முற்றாக நிராகரித்து கொள்கைகளில் மிகவும் பற்றுறுதி கொண்டவர்களை ஒன்றிணைத்து பதவி ஆசைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உறுதியான அரசியற் பேரியக்கம் ஒன்றை எம்முடன் இணைந்து உருவாக்க நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வர வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

எமது மக்களின் விருப்புக்கு அமைவாக நாங்கள், நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து கொள்கை வழி கூட்டு ஒன்றை உருவாக்க இதயசுத்தியுடன் செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்ற விடயத்தை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஆணித்தரமாக தெரிவித்து வந்திருக்கின்றோம். நாம் அந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றோம் என்பதை மீள வலியுறுத்த விரும்புகின்றோம்.

கொள்கைவழி கூட்டுக்கு நாம் தயாராயிருந்த சூழலில், குறித்த கூட்டில் EPRLF கட்சியை இணைத்துக் கொண்டால் மாத்திரமே தான் எம்முடன் கூட்டிணைவேன் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வைக்கும் தமிழ் மக்களின் கொள்கைவழி அரசியலுக்கு மாறான கோரிக்கையே எமது கூட்டிணைவை சாத்தியமற்றதாக்கி வருகின்றது.

மேலும் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது ஊடக அறிக்கையில் தமிழ் மக்கள் பேரவையில் இருந்து கொண்டு 'எழுக தமிழ்' நிகழ்வை நடத்திய கட்சிகள் கூட்டிணைய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையானது ஒரு மக்கள் பேரியக்கமாக செயற்பட்டு, தமிழ் மக்கள் பேரவையினால் தீர்வுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் 2018.02.10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் தீர்மானங்களை எட்டும் பொருட்டு தமிழ் மக்கள் பேரவை 2017.11.12ஆம் திகதி கூடியபோது கொள்கைகளை கைவிட்டு பயணிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியையோ அதன் சின்னத்தையோ உள்வாங்குவதில்லை என்றும் அக்கட்சியுடன் தேர்தல் கூட்டமைப்பதில்லை என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போதும் அதன் பின்னரும் தமிழ் மக்கள் பேரவையின் முடிவுகளை புறந்தள்ளிய EPRLF கட்சியானது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை கைவிட்டு தேர்தலை எதிர்கொண்டதாலும் தேர்தலின் பின் இனப்படுகொலை புரிந்த மகிந்த ராஜபக்ஷவுடனும் ஏனைய பேரினவாதக் கட்சிகளுடனும் ஒட்டுக்குழுக்களுடனும் கூட்டுச் சேர்ந்து பிரதேச சபைகளை கைப்பற்ற முனைந்ததாலும், இவ்வருடம் நடைபெற்ற அவர்களது கூட்டமொன்றில் இனப்படுகொலை அரசை பாதுகாக்கும் விதத்தில் விடுதலைப் புலிகள் மீது போர்க்குற்றம் சுமத்தி பிரசுரம் வெளியிட்டதாலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் நோக்கில் கொள்கை வழி பயணிக்கும் கூட்டு ஒன்றில் EPRLF கட்சியுடன் நாம் சேர்ந்து எதிர்காலத்தில் பயணிப்பது சாத்தியமாகாது என்பதுடன் EPRLF கட்சியுடனான கூட்டானது கொள்கை வழி நின்று தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தடையாக இருக்கும் என்ற உறுதியான நிலைப்பாட்டை நாம் எடுப்பதற்கு எம்மை தள்ளியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளை கைவிட்டு தமிழ் மக்களுக்கு தவறிழைத்துள்ளது என்றும் அவர்களை தோற்கடிக்க வேண்டும் என்றும் கூறுகின்றவர்கள் அதே கொள்கைகளை கைவிட்டு தவறுகளை இழைக்கும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் தரப்புகளை உள்வாங்கி ஓர்கொள்கை வழிசார் உறுதியான கூட்டு ஒன்றை உருவாக்கலாம் என்று எண்ணுவது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் ஓர் செயலாக மட்டுமே அமைய முடியும்.

சைக்கிள் சின்னத்தில் போட்டியிட தயார் என்று தான் தெரிவித்த போதும் அதை நிராகரித்து நாம் கட்சி நலன்களை முன்னிறுத்தி செயற்படுவதாக நீதியரசர் விக்னேஸ்வரன் எம்மீது குற்றம்சாட்டுவது எமக்கு வேதனையளிக்கின்றது. எமது கட்சி நலனை மாத்திரமே முன்னிறுத்தி நாம் செயற்படுவோமாக இருந்தால் 'சைக்கிள் சின்னத்தில் போட்டியிட தயார்' என்ற நீதியரசரின் வேண்டுகோளை நாம் இறுகப் பற்றியிருப்போம்.

இந்தியாவின் வழிகாட்டுதலில் தான் நீதியரசர் செயற்படுகின்றார் என்று நாம் குற்றம்சாட்டுவதாக நீதியரசர் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார். நீதியரசர் விக்னேஸ்வரனை 2018.10.06 ஆம் திகதி நாம் சந்தித்தவேளை நீதியரசரே தான் சந்தித்த இந்திய தூதரக அதிகாரிகள் "தான் எம்முடன் இணைவதை விரும்பவில்லை" என்றும் "ஏன் இந்தியா உங்களை எதிரியாக பார்க்கின்றது?" என்றும் கேட்டிருந்தார்.

இந்தியாவின் நலன்களுக்காக மட்டுமே செயற்பட்டு வருகிறார்கள் என்று தமிழ் மக்களால் கருதப்படும் EPRLF கட்சி இன்றி அரசியல் கூட்டு இல்லை என்றும் EPRLF உடனான தனது கூட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணையத் தயாரில்லை என்றால் EPRLF கட்சியுடன் தனித்து கூட்டிணைந்து செயற்படபோவதாகவும் ஓர் நிலைப்பாட்டை நீதியரசர் எடுத்திருப்பது மிகவும் வேதனையான ஓர்விடயம் என்பதுடன் அது தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை முற்றாக சீரழித்துவிடும் என்பதையும் மிகுந்த பொறுப்புடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் கொள்கைகளை முன்னிறுத்தி பயணிப்பதாக உறுதிமொழியளித்து விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் பின்னர் அக் கூட்டமைப்பானது இன்று கொள்கை வழிமாறி, தடம் மாறி பயணிப்பதால் தமிழ் மக்கள் அதனை நிராகரிக்க வேண்டும் என இன்று நீதியரசரும் நாங்களும் எதற்காக கோருகின்றோமோ அதே நியாயமான காரணத்திற்காகவே EPRLF கட்சியையும் நிராகரிக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)


## 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் ஞானமுத்து அந்தோனிப்பிள்ளை



பிறப்பு 1955.01.01

இறப்பு 2019.06.12

நீர் ஏற்றிய தீபங்கள்
நின் பாதங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்க
நீர் மட்டும் ஏன் அணைந்து விட்டீர்

நீர் ஆற்றிய பணிகள், ஈன்ற உதவிகள்
செய்த தருமங்கள், எமக்களித்த அன்பு பாசம்
எல்லாமே உம் நினைவை
எம் அனைவர் அகத்திலும் நிலைபெற்றனவே

உங்கள் பிரிவினால் துயரும் உறவினர்கள்
3ம் கட்டை, ஆனைக்கோட்டை.

(8558)



## தொண்டர்கள் தேவை

*தற்கொலைகளைத் தடுப்போம்!*

**உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?**

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.

பயிற்சி நெறி மிக விரைவில்.
**உடனே அழையுங்கள்.**

**கைகொடுக்கும் நண்பர்கள்**

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS) வீதிக்கு அண்மையில்)

077 900 8776 (மு.ப. 9.00-பி.ப. 1.00)

(8559)


## வைத்தியர் ஷாபிக்கு எதிரான ஆர்ப்பாட்டம்



(குருநாகல்)

வைத்தியர் ஷாபிக்கு எதிர்ப்பு தெரிவித்து, அபே ஜனபலய அமைப்பினால் நேற்று குருநாகல் போதனா வைத்திய சாலை முன்பாக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அபே ஜனபலய அமைப்பின் குருநாகல் மாவட்ட தலைவர் டேன் பிரியசாத்தின் வழிநடத்தலின் கீழ் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (7)

## இராசி பலன்

12.07.2019
ஆனி 27, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 3.10 மணிவரை
விசாகம் முன்னிரவு 7.08 மணிவரை
சுபநேரம் 5.59-7.29 மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை
சயன ஏகாதசி விரதம்
வளவன்

கிரகநிலை: சூரி, புத, சுக், ராகு | செவ் | சனி, கேது | குரு | சந்

சந்திராஷ்டமம் அச்சுவினி, பரணி பகல் 1.16ற்கு விருச்-சந்

**மேடம்:** முக்கிய காரியங்களை மதியத்திற்கு முன்னர் செய்து முடிப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், பகைவர்கள் விலகுவர், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்:** வாக்குமேன்மையுண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியம் ஒன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி பயணமொன்று இடம் பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அவதியுறும் அலையாத்திக் காடுகள்



உலகில் இதுவரை எத்தனை வகையான தாவரங்கள் காணப்படுகின்றன என்பது இதுவரை உறுதியான ஆய்வுத் தகவல்களாக வெளிவரவில்லை. இருந்த போதும் லண்டனில் உள்ள றோயல் தாவரவியல் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி சுமார் நான்கு இலட்சம் வகையான தாவர இனங்கள் காணப்படுவதாக அறியமுடிகிறது.

இதில் பத்து வீதமான தாவர இனங்கள் அழிவின் விளிம்பில் இருப்பதாக ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலையும் வெளியிட்டுள்ளனர். அத்தோடு தற்போதுள்ள தாவரங்களில் ஐந்தில் ஒரு பகுதி பல வகை யான ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் இவற்றில் சில அழிந்து போகக் கூடும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

அந்த வகையில் இலங்கையிலும் சில வகையான தாவரங்கள் அழிந்து செல்லக் கூடிய நிலையில் இருப்பதாக சூழலியலாளர்கள் தொடர்ச்சியாக கூறிவருகின்றனர். அதில் முக்கியமானது இந்த அலையாத்தி தாவரங்கள் ஆகும்.

நிலமும் கடலும் சேரும் பகுதிகளில் ஒருசில இடங்கள் மண்ணும் சவர் நீரும் (கடல் நீரிலும் பார்க்க உவர்த் தன்மை குறைந்த) சேர்ந்து சேற்றுப் பகுதியாகவும் சில அடி உயரத்திற்கு நீர் நிறைந்தும் இருக்கும். இவ்வாறான கடற்கரை யோரங்கள் "சதுப்புநிலம்" எனும் போசணை கூடமாக உருவெடுக்கின்றது. இத் தரைத் தோற்றத்தில், செறிந்து வளரும் தாவரங்கள் "கண்டல் தாவரங்கள்"எனப்படும் உவர்மற்றும் நன்னீரில் வளரும் தாவரங்களாகும். மேலும் இவை உள்வரும் கடல் அலையைத் தடுத்து அனுப்புவதால், இத்தகைய தாவரங்கள், செடிகள் நிறைந்திருக்கும் இடம் "அலையாத்திக் காடு" (Mangrove forest) என வழங்கப்படுகின்றது.

அலையாத்தித் தாவரங்களின் வேர்கள் நீருக்கு மேலாக அடர்ந்து தெரிவதுடன், கடற்கரை ஓரங்களில், கடலலையினால் ஏற்படக் கூடிய மண்ணரிப்பைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இச் சிறப்பம்சமே 2004 டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அலையிலிருந்து ஒரு சில கரையோரங்களை எந்தவித பாதிப்பும் இல்லாமல் பாதுகாத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அலையாத்தித் தாவரங்களில் கிட்டத்தட்ட 80 வேறுபட்ட இனங்கள் இருப்பதுடன், இவை ஒட்சிசன் குறைவான மண்ணில் வளரும் தன்மை கொண்டிருப்பதாகவும், நிலநடுக்கோட்டுக்கு அண்மையாக இருக்கும், வெப்ப மண்டல, அயன அயல் மண்டல பகுதிகளிலேயே வளரும் என்றும் அறியப்படுகின்றது. மிகவும் கடினமான, சூழலை தாங்கும் தன்மை கொண்ட ஒரு சில இனங்கள் மட்டுமே மித வெப்ப மண்டலத்தில் வாழும் தன்மை கொண்டிருக்கின்றன.

இலங்கையில் றைசோபோறாவின் இரு இனங்களும், சிறியொப்ஸ் (சிறுகண்டல்) இல் இரு இனங்களும் சொனறேசியாவில (கின்னமரம்) மூன்று இனங்களும் காணப்படுகின்றன. ஆவிசினியா (கண்ணா) இல் இரு இனங்கள், ஏஜிசியஸ் (வெற்றிலைகண்ணா) இல் ஒரு இனமும் அகனதஸ் (முள்ளி) இல் ஒரு இனமும் எக்ஸோகரியா (தில்லை) இல் ஒரு இனமும் புசைலோகாபஸ் (கடல் மாங்காய்) இல் ஒரு இனமும் கிளடேன்றோன் (பிச்சு வெளாத்தி) ஒரு இனமும் காணப் படுகின்றன. இங்கு காணப்படும் ஒரே ஒரு பாமே குடும்பத்தாவரம் நிபாபுறுட்டிகன்ஸ் ஆகும்.

ஒரே ஒரு பன்னம் அக்றொஸ்ரிகம் (மின்னி) ஆகும். ஹெறற்றீரா (சோமுந்திரி), டொலிகோடேன் றோன்(வில்பாதிரி), செபரா மங்கா (நச்சுமாங்காய்), டெரிஸ் (தேக்கில்) போன்றவையும் காணப்படுகின்றது. இலங்கையில் ஏறத்தாழ 40 இனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சிறியசெடி வகைகள் (பற்றைகளாகவும் காணப்படுகின்றன) முதல், கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படும் மரங்களான 60 மீற்றர் உயரம் வரை வளரும் மரங்கள் வரை அடங்கும்.

கடற்கரை பகுதிகளை பாதுகாக்கும் இயற்கை உயிர் அரண்களாக விளங்கும் அலையாத்திக் காடுகள் புயல், ராட்சத அலை, பருவகால மாற்றம், அலை உயர்வு செயல்கள் மற்றும் கடல் அரிப்புபோன்ற கடற்கரை தீமைகளின் போது வேகத்தடைகளாக சேவை புரிந்து கடற்கரையில் உள்ள பகுதிகளை பாதுகாக்கின்றன.

மேலும் முருகை கற்பாறைகள், கடற்படுக்கைகள் என்பன சேதமடையாமல் பாதுகாக்க இது பேருதவி புரிகின்றது. இது மட்டுமல்லாமல் நீர்வாழ உயிரினங்களான மீன், இறால், நண்டு மற்றும் நத்தைகள் என்பவற்றின் இன விருத்திக்கும் அதன் தொடர்ச்சியான நிலை பேற்றுக்கும் அவசியமான சூழலை இந்தக் கண்டல் தாவரங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. உலக நிலப் பரப்பில் ஒரு வீதத்தைக் கண்டல் தாவரங்கள் கொண்டிருப்பதாகவும் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்க பெரிதும் உதவுவதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

குளிர் காலங்களில் வெளிநாட்டிலிருந்துவரும் பறவைகளின் சரணாலயமாகவும் இந்த அலையாத்திக் காடுகள் உள்ளன. சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவரும் இவ்வகையான அலையாத்தித் தாவரங்கள், வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் முதல் மார்ச்வரையில் அதிக எண்ணிக்கையிலான குடிபெயர் பறவைகள் இந்த பகுதிக்கு வருகின்றன. இப் பறவைகள் சைபீரியா, மத்திய ஆசியா, ரஷ்யாவின் வடபகுதிமற்றும் ஐரோப்பா போன்ற உலகின் பலபகுதிகளில் இருந்துவருகின்றன.



மேலும் பெரியபூநாரை, யூரேசிய அரிவாள் மூக்கு உள்ளான், அரிவாள் மூக்கு உள்ளான், நீலவால் பஞ்சுருட்டான், நாமத்தலைவாத்து, ஊசிவால் வாத்து, மங்கோலியப் பட்டாணி உப்புக்கொத்தி, செங்கால் நாரை, சிறவி, நீர்க்காகம் போன்ற நீர்ப் பறவைகளைக் குறிப்பிடலாம்.

கொக்கு, மீன் கொத்தி, நாரைபோன்ற அழியும் தறுவாயில் உள்ள நீர்ப்பறவைகள் இப்பகுதியில் நிலையாக வசிக்கின்றன. சில பறவைகளான பருந்து, சிவப்பு வளைய பச்சைக் கிளிகள் மற்றும் புள்ளிபுறா வகைகள் உள்ளன. சதுப்பு நிலக் காடுகளில் பாலூட்டி வகைகளான காட்டுப் பூனைகள், குறுகிய மூக்கு உள்ள பூசந்தின்னி வௌவால்கள் காணப்படுகின்றன.

பல்வேறு வகையான உயிரினங்கள் பல்லுயிர் பெருக்கம் செய்யவும், இடம்பெறச் செய்யவும் ஏதுவான பகுதியாக அலையாத்தி காடுகள் இருக்கின்றன. உயிரினங்களுக்கு உணவு வலயமாகவும் இவை விளங்குகின்றன. காற்றில் கலந்துள்ள நச்சுகளைபோக்கி, தூய்மையான காற்றையும் அலையாத்தி காடுகள் வழங்குகின்றன. இயற்கை சூழலுக்கும், மனித சமூகத்துக்கும் மிகப்பெரிய அளவில் பயன் தரும் அலையாத்திக் காடுகள் தற்போது வளர்ச்சி என்ற பெயரிலும், நடைபாதை வழித்தடங்களுக்காகவும், வெளித்துறை முகவிரிவாக்க திட்டங்களுக்காகவும், தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் கரையோரப் பகுதியில் கிட்டத்தட்ட 6000 - 7000 ஹெக்டயர் பரப்பு அலையாத்திக் காடுகளைக் கொண்டிருப்பதாக அறியப்படுகின்றது. இவற்றில் மிகப் பெரிய அலையாத்திக் காடு, புத்தளத்தில் உள்ள குடாப்பகுதியைச் சார்ந்து அமைந்துள்ளது. இது 3385 ஹெக்டயர் பரப்பை உள்ளடக்கியுள்ளது. மட்டக்களப்பு, திருகோணமலை, மாவட்டங்களிலும் இவ்வகையான அலையாத்திக் காடுகள் பெரியளவில் காணப்படுகின்றன. காலி மாவட்டம் பெந்தோட்டபகுதியிலும் அலையாத்திக் காடு உள்ளது. இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள, இந்தியப் பெருங்கடல் கரையோரமாக அமைந்துள்ள பலபிட்டிய என்னும்



இடத்தில், மதுகங்கா எனப்படும் ஆறு கடலில் கலக்கும் பகுதியில் இவ்வகையான அலையாத்திக் காடுகள் காணப்படுகின்றன.

இலங்கையின் வடபகுதியில், குறிப்பாக மண்டைதீவு, சரசாலை மற்றும் நாகர் கோவில் போன்ற பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் அலையாத்தி மரங்கள் உள்ளன.

தற்போது இம் மரங்களும் அழியும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளன. பொதுமக்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அழிவுப் பாதையில் செல்கிறது. இம்மரத்தின்இலை, தழைகள் ஆடு, மாடுகளுக்கு தீவனங்களாகவும், இதன் கிளைகள் விறகுக்காகவும் வெட்டப்படுகின்றன.



இதனால் இம் மரங்கள் குறைந்து அலையாத்தி காடுகள் அழிந்து வருகின்றன. இதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைத்து மக்களின் கோரிக்கையாகும்.

இருந்தபோதும் வேலணை கடலோரப்பகுதி, காரைநகர்-பொன்னாலை கடலோரப்பகுதி மற்றும் வட பகுதியின் சொத்தான யாழ்ப்பாண கடல்நீரேரி பகுதிகளில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மீள்நடுகை மற்றும் பல்கலைக்கழகங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் மீள்நடுகை செயற்றிட்டங்கள் இப்பிரச்சினைக்கு புத்துயிரளிக்கின்றது.

நிறைவாக, அலையாத்தித் தாவரங்கள் சூழல் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகக் காணப்படுவதால் அதனைப் பல்வேறுபட்ட அழிவுகளிலிருந்து பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு மக்களினதும் தலையாய பொறுப்பாகும்.

இது பற்றி மக்கள் தெளிவு பெறுவதன் மூலமாக இயற்கை பொக்கிஷங்களையும் அழகாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சதுப்பு நில மரங்களை சுத்தம் செய்து பாது காத்து பயன்பெற வேண்டும். கண்டல் சூழற்றொகுதி அரிய புத்தகங்கள் நிறைந்த நூலகம் போன்றது. அற்புதமானது.

இதனையாவது நாம் பாதுகாத்து எமது சந்ததிகளுக்குக் கொடுப்பது எமது தலையாய பாரிய கடமைகளுள் ஒன்றாகும்.

மிஸ்டர் சயன்ரிஸ்ட்
யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து...

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

## காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள்



(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகமத் ஹசேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமர்வுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த இந்துக்கள் மற்றும் பிற மதங்களைச் சேர்ந்த அகதிகளிற்கு குடியுரிமை வழங்க வேண்டும் என குடியுரிமை சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதிகளுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கு இலங்கையில் மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டு, இந்தியா நோக்கி அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள இலங்கை மக்கள், செங்கல் பட்டு, மண்டபம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் மக்களுக்கு தற்போது வரையில் இந்தியக் குடியுரிமை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# தாஜ் சமுத்ராவில் ஏன் தாக்குதல் நடக்கவில்லை?

## ஆராயும் தெரிவுக்குழு

(கொழும்பு)

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் குண்டை வெடிக்க வைக்கும் திட்டத்தை பயங்கரவாதிகள் ஏன் கைவிட்டனர் என்பது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற தினத்தில், தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தங்கியிருந்தவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும் அங்கு காலையுணவு உண்டவர்களின் பட்டியலையும் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு கோரியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நேற்று முன்தினம் அமர்வின் போது, தெரிவுக்குழுவின் தலைவர் ஆனந்தா குமாரசிறி இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி பல இடங்களில் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிகள், தாஜ் சமுத்ரா ஹோட்டலில் குண்டை வெடிக்க வைக்கும் திட்டத்தை ஏன் கைவிட்டனர் என்ற கேள்விக்கான விசாரணைகளை முன்னெடுக்க இந்தப் பட்டியல் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையின் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ஞானசாரர் விடுதலை விவகாரம்

# சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பை ரத்து செய்யக்கோரி, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னலிகொட தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதி மன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

உச்ச நீதி மன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவே நேற்று இந்த வழக்கை செப்டெம்பர் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய, நீதிபதி பிரசன்ன ஜயவர்த்தன மற்றும் நீதிபதி எல்.டி.பி. தெஹிதெனிய ஆகியோரே நேற்று இத்தீர்மானத்தை அறிவித்தனர்.

சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்துள்ள மனுவில் ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை அரசியலமைப்பின் 12(1) சரத்துக்கு முரணானது என்றும் தெரிவித்தார்.

ஞானசார தேரருக்கு ஆறு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதும் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி அன்று அவர் பொது மன்னிப்பின் கீழ் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## குறை'களை' பதிகம் 62

# மரம் நட்டால் போதுமா?

மரம் நடுவோம் மரம் நடுவோம்
என மாரித் தவளைகளாய்
மாரிவரும் போது
மைக்கில் கதறிடுவோம்
மரம் நடுவோம் போஸ்கொடுத்து
புகைப்படம் எடுப்போம்
ஊடகங்களில் கதற விடுவோம்

மழைவரும் காலத்தில்
நூறு மரம் வாங்கியாச்சு
நூறு குழி பறித்தாச்சு
குழியில் மரம் நட்டுவிட்டால்
நம் வேலை முடிந்துவிட்டதென
நாமுண்டு நம் சோலியுண்டென
சென்றுவிட
வீதியோரம் நட்டமரம்
நாவறண்டு நீருக்காய் துடிக்கும்

நமக்கென்ன
அடுத்த் மழைக்கு
அடுத்த நூறு மரம் நட்டு
அறிக்கைகளுடன் போகிறது
எம் பிழைப்பு...

வீதி அகலிப்பென்று
எம் முப்பாட்டன் பெயர்சொன்ன
பழமை மரங்கள் தறிபட
காப்பெற் வீதிக்காய்
ஆவென்று நின்றோமே
இதைவிடக்கொடுமை ஏதுமுண்டோ?

இப்போதும்
பெரு மரங்களில் பற்றிக் கிடக்கும்
குருவிச்சைகளை அகற்றி
அதன் ஆரோக்கியம் பேண
எங்களிடம் என்ன திட்டமிருக்கிறது

ஓ... ஒருவகையில்
குருவிச்சைதானே நாமும்
அடுத்தவரில் ஒட்டியிருந்து
உறிஞ்சும் வரை உறிஞ்சுவது
எம் குணமும் தானே

இயற்கை ஆர்வலர்களே!
மரம் நடுங்கள் நன்று- அதற்கு
நீரூற்றி வளர்ச்சியையும் பாரும்
பெருமரங்கள் அருமை பேணும்
அவை வீழ்கிறது என்றால்
எம் வரலாறும்
வீழ்கிறது என்றே பொருள்

மாவை. நா. கஜேந்திரன்

# பயங்கரவாதத் தாக்குதல்; மேலும் ஒருவர் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கூழாவடியைச் சேர்ந்த கருணாகரன் உமாசங்கரி என்ற பெண்ணே நேற்று வியாழக்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர்.

அத்தோடு 500இற்கும் மேற்பட்டோர் அவயவங்களை இழந்தும் படுகாயங்களுக்கு உள்ளாகியும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# சர்வதேசமே இலங்கை அரசிடமிருந்து தீர்வைப் பெற்றுத் தாருங்கள்

## காணாமல் போனோரின் உறவுகள் மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடித்து தரக் கோரி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரியும் சர்வதேசத்திற்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவினர்கள் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவினர்கள் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக் கப்பட்ட, கடத்தப்பட்ட வர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கைஅரசேஉண்மையை மறைக்காதே "ஒரு நாள் நிச்சயம் வெளி வரும், "சர்வதேசமே எங்களுக்கான நிரந்தர தீர்வை" இலங்கை அரசிடம் இருந்து பெற்றுத் தாருங்கள், "அம்மா என அழைக்க என் மகனை திருப்பிக்கொடு", மரண பதிவு வேண்டாம் மகனை தா, இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை திருப்பி தா, இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளும் காணாமல் ஆக்கப்பட்டதோ? உள்ளிட்ட பல வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அமைதியான முறையில் மேற் படி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சர்வ மதத்தலைவர்கள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை எஸ். ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் உட்பட மன்னார் நகர சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து மகஜர் ஒன்று மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் ஐ.நா சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)




## தேசிய உணவு உற்பத்தித் திட்டம்
### முல்லையில் 244 விவசாயிகள் பயனடைவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதியின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத் திட்டத்தில் ஒன்றான தேசிய உணவு உற்பத்தி திட்டத்தினை விருத்தி செய்யும் நோக்கில் 10.16 மில்லியன் ரூபா செலவில் விவசாயிகளுக்கு உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 50 வீத மானிய அடிப்படையில் 20 விவசாயிகளுக்கு சூரிய சக்திமூலம் நீர் இறைக்கும் இயந்திரங்களும் 100 விவசாயிகளுக்கு புல்வெட்டும் இயந்திரங்களும் 52 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 36 விவசாயிகளுக்கு பயன்தரு தொம் யேசி மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இழைய வளர்ப்புமூலம் கப்பல் வாழைக்குட்டிகள் 36 விவசாயிகளுக்கு 3966 வாழைக் குட்டிகளும் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை வைத்து விவசாயிகள் பயனடையும் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நன்னீர் மீன்பிடி தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வவுனிக்குளம், கோட்டை கட்டியகுளம், முத்து ஐயன்கட்டுக்குளம், உடையார் கட்டுக்குளம், மருதமடுக்குளம், மதவாளசிங்கன் குளம் ஆகிய குளங்களில் நெக்டப் நிறுவனம் ஊடாக ஒரு இலட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-281)

## மணல் ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நாளை காலை 9 மணிக்கு பகிரங்க மணல் ஏல விற்பனை இடம்பெறவுள்ளது. ஏலவிற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (9)

## திருக்கேதீஸ்வர நுழைவாயில் விவகாரம்
### அமைச்சர் தலைமையில் நாளை கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளைவு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாளை சனிக்கிழமை தேசிய ஒருமைப்பாடு அரச கருமமொழிகள் சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது மன்னார் திருகேதீஸ்வர வளைவு அமைப்பது தொடர்பில் மத அமைப்புக்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக அமைப்புக்களையும் இணைத்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் நாளை நல்லெண்ணக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. (9-10)

## கல்வி நிலையத்தின் அசமந்தத்தால் பொதுமக்கள் விசனம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் தனியார் கல்வி நிலையமொன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் புகைப்படங்கள் தாங்கிய விண்ணப்பப்படிவங்கள் வீதியில் வீசப்பட்டுள்ளமை தொடர்பாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள தனியார் கல்வி நிலையமொன்று தமது நிலையத்தில் கற்கும் மாணவர்களின் விபரங்களை சேகரிப்பதற்காக விண்ணப்பப்படிவங்களைப் பயன்படுத்தியுள்ளது. இதில் மாணவிகள் மற்றும் மாணவர்களது புகைப்படங்களும் அவர்கள் தொடர்பான விபரங்கள், பெற்றோரது தொலைபேசி இலக்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் குறித்த விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் நெளுக்குளம் கனரா ஒழுங்கையின் குளப்பகுதியில் வீசப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை இவ் வீதியில் பயணித்தவர்கள் பெண்களின் புகைப்படங்கள் ஒட்டப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அதிகளவில் காணப்படுவதை அடுத்து இது தொடர்பில் ஆராய்ந்த போதே தனியார் கல்வி நிலையத்தின் அசமந்தப்போக்கு தொடர்பில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பெற்றோர் விசனமடைந்துள்ள நிலையில் குறித்த தனியார் கல்வி நிலையத்தினருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பாக தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது,

தமது கல்வி நிலையம் இடம் மாற்றப்பட்டபோது பழைய விண்ணப்பப்படிவங்களை அழிப்பதற்காக வைத்திருந்ததாகவும் அவை களவாடப்பட்டு வீதியோரங்களில் வீசப்பட்டுள்ளதாகவும் அவற்றில் சிலவற்றை தான் எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் இப் படிவங்கள் களவாடப்பட்டமை தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு எதனையும் தான் செய்யவில்லை எனவும் தெரிவித்தார். (9-299)

## வயல் காணிகளில் வைக்கோல் கொளுத்துவதால் பண்ணையாளர்கள் விசனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக நெல் அறுவடை செய்யப்பட்ட வயல் காணிகளில் உள்ள வைக்கோல் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருவது தொடர்பில் பண்ணையாளர்களும் பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் இவ்வாண்டு முன்னெடுக்கப்பட்ட சிறுபோக நெற்செய்கை அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டு 90 வீதமான அறுவடைகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிலையில் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்காணிகளில் உள்ள வைக்கோல் தொடர்ச்சியாக தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருகின்றன.


பயிர்ச்செய்கை காலங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சலின்மை மற்றும் வரட்சி நிலை காரணமாக கால்நடைகள் உணவின்றி காணப்பட்டன.

சிறுபோக அறுவடை நிறைவு பெற்று வரும் நிலையில் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை அறுவடை செய்த வயல் நிலைங்களில் தற்போது வைத்து பராமரித்து வருகின்றனர்.

இந்நிலையில் அறுவடை செய்த வயல் நிலங்களில் உள்ள வைக்கோலை தீயிட்டு கொளுத்தி வருவதால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்த வயல் நிலங்களில் காணப்படும் வைக்கோல் மற்றும் வயல் நிலங்களில் தீ வைத்து கொளுத்துவது சட்டரீதியற்றது என்றும் இவ்வாறு வைக்கோல்கள் தீயிட்டு கொளுத்தும் விவசாயிகளுக்கான மானியங்கள் நிறுத்தப்படும் என்றும் இவ்வாறான விவசாயிகளின் விபரங்களை சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புக்கள் கமநல சேவை நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## புகையிரத கடவை காப்பாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(நெளுக்குளம்)

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த புகையிரத கடவைக்காப்பாளர்கள் நேற்று காலை வவுனியா புகையிரத நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்து தமது கடமையை புகையிரத திணைக் களத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என தெரிவித்து மேற் குறிப்பிட்ட போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் 250 ரூபா சம்பளத்தினை உயர்த்து, பொலிஸாரிடம் இருந்து எம்மை மீட்க வேண்டும், எமது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன?, எம்மைநிரந்தர நியமனத்தில் உள்வாங்கு என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு சுமார் ஒரு மணி நேரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (9-299)

# வன்னி பிரதேச அபிவிருத்திக்கு 300 மில்லியன் ஒதுக்கீடு

(நெளுக்குளம்)

வன்னி பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அமைச்சர் மனோ கணேசன் 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சரின் வன்னிப்பிராந்தியத்திற்கான இணைப்பாளர் ச.விமலச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் நிதி ஒதுக்கீட்டில் வன்னி பிராந்தியத்திற்கு சுமார் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடானது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மையப்படுத்தியதாக அமைந்திருக்கின்றது.

இந்த வேலைத்திட்டங்கள் அவருடைய அமைச்சின் இணைப்பாளர்களின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிதியின் ஊடாக பாடசாலைகள் வீதி அபிவிருத்தி. கிராமிய அபிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி என பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதில் வவுனியா மாவட்டத்திற்கு 100 மில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் வவுனியா மாவட்டத்தில் முதற்கட்டமாக இன்று 11 மில்லியன் ரூபாவிற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களிற்கான நிதி ஒதுக்கீடு வவுனியாவில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதி கிடைக்கப்பெற வேண்டியவர்களுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் மனோ கணேசன் வன்னி பிராந்தியத்திற்கான அபிவிருத்தி போதாமல் இருப்பதை கருத்தில் கொண்டே இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளார். தேவை ஏற்படின் மேலதிகமான நிதி ஒதுக்கீட்டை செய்வதற்கும் அமைச்சர் கரிசனை கொண்டுள்ளார்.



இதேவேளை வாழ்வாதார உதவிகள் மேலும் ஒரு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வேலைத்திட்டங்களானது வன்னி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டினை அதிகரிக்க முடியும் என்ற அமைச்சரின் எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றதாகவும் வவுனியா மாவட்டத்தில் வேலைத்திட்டங்களை அமைச்சரின் வவுனியா இணைப்பாளர் எம். பி. நடராஜ் ஊடாக நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

நேரடியாகவும் மக்கள் எம்முடன் தொடர்பு கொண்டு இன்னும் அதிகமான வேலைத் திட்டங்களையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

அபிவிருத்தியுடன் நாங்கள் நின்றுவிடாது மிக விரைவில் அமைச்சரின் இணைப்புக் காரியாலயம் ஒன்றினை வவுனியாவில் திறந்து வைத்து அதனூடாகவும் மக்கள் பிரச்சினைகளை நேரடியாக தீர்த்துவைப்பதற்கான சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

# பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் குரல்கள் ஆவண தொகுப்பு கையளிப்பு



(பூநகரி)

சர்வதேச பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் தினத்தை முன்னிட்டு "நிலைமாறு கால நீதிக்காய் ஏங்கும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் குரல்கள்" நிகழ்வு கடந்த புதன்கிழமை மட்டுவில் நாடு, பூநகரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர் நோக்கும் சவால்களைக் கொண்ட விபரங்கள் அடங்கிய ஆவணம் வெளியிடப்பட்டது.

மேலும், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களிலுள்ள பெண்களின் சமூக, பொருளாதார, அரசியற்பண்பாட்டுரிமைகள் கோரி வேண்டுகைகள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அமரா குடும்ப தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றிய தலைவி திலகவதி நடனசபேசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பூநகரி உதவி பிரதேச செயலாளர் பார்த்தீபன் கிரிஜா, விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் இணைப்பாளர் கோமதி சிவகுமார், சிரேஷ்ட சமூக அணி திரட்டாளர் றியாந் பானுஜா உட் பட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் உறுப்பினர்கள் பயனாளிகளாகக் கலந்து கொண்டனர். (9)




# மன்னாரில் 10 வருடங்களின் பின்னர் மீன்பிடி அனுமதி பெற்ற மீனவர்கள்



(மன்னார்)

மன்னார் ஈச்சளவாக்கை சன்னார் பகுதிகளில் நன்னீர் மீன்பிடியில் பல வருடங்கள் ஈடுபட்ட தமிழ் மீனவர்கள் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டு நாட்டில் ஏற்பட்ட சுமுகமான சூழலின் பின்னர் மீண்டும் தம் சொந்த நிலங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மீள்குடியேறி 10 வருடங்கள்கடந்த நிலையில் குறித்த ஈச்சளவாக்கை சன்னார் பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவர்களை இதுவரை பெரிய மடு மீனவர் சங்கத்தை சேர்ந்த சகோதர இன மீனவர்கள் பெரியமடு குளத்தில்மீன்பிடி தொழிலில் ஈடுபட் அனுமதிக்கவில்லை.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் MSEDO ஊடாக வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்டு கடந்த ஜனவரி மாதம் வவுனியா நீரியல் வள திணைக்களத்தின் ஊடாக குறித்த பாதிக்கப்பட்ட நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

நீரியல்வளத்துறை திணைக்களத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்ட போதும் மீண்டும் குறித்த தமிழ் மீனவர்கள் பெரிய மடு குளத்தில் மீன்பிடிப்பதற்கான சகோதர இன மீனவர்களால் மறுக்கப்பட்டு வந்த நிலையில் கடும் போராட்டத்தின் மத்தியில் ஆறு மாதங்களின் பின்னர் இரண்டு மீனவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு குறித்த மீனவர்கள் நேற்றைய தினத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் நீரியல் வளத் துறை திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்ட மற்றும் ஒரு தமிழ் மீனவருக்கு தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# முல்லையில் 39 இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(பனிக்கன்குளம்)

அமைச்சர் மனோகணேசன் தலைமையில் உள்ள இந்து சமய விவகார அமைச்சின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 39 இந்து ஆலயங்களுக்கு ஒருதொகுதி நிதி வழங்கிவைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பல ஆலயங்கள் இன்றும் புனரமைப்பு செய்யப்படாத நிலையில் அவற்றை புனரமைக்கும் நோக்கில் ஆலய நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக ஒரு தொகுதி நிதி இந்து சமய விவகார அமைச்சினால் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்த நிதியினை நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன் வழங்கி வைக்கவுள்ளார் என தேசிய நல்லிணக்கம், அரசகரும மொழிகள், சமூக அபிவிருத்தி மற்றும் இந்துசமய விவகார அமைச்சின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினருமான ஆ.ஜேன்சன் தெரிவித்துள்ளார். (9-281)

# வவுனியா தெற்கு வலய ஆசிரியர்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா தெற்கு வலய ஆசிரியர்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் மாலை வவுனியா பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர வீதி -கண்டி வீதி வழியாக கோசங்களை எழுப்பியவாறு வவுனியா தெற்கு வலய கல்விப் பணிமனைக்கு முன்பாக சென்று போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

22 வருடங்க ளாக ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை. எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை, ஆசிரியர்களுக்கு மன அழுத்தங்களை தரக்கூடிய வேலைகளை செய்கிறார்களே தவிர ஆசிரியர்கள் சுதந்திரமாக கற்பிப்பதற்குரிய வழி வகைகள் எதுவும் செய்துதரவில்லை. வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு ஆறு வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் மறுத்துவருகின்றது.

இன்று நாங்கள் வவுனியா தெற்கு வலயத்தில் ஆரம்பித்திருக்கின்றோம். இப் பிரச்சினையை இத்துடன் நிறுத்தாது தொடர்ச்சியாக மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டங்கள் வரை எமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை கொண்டு செல்வோம்.

ஆசிரியர்களுக்குரிய சம்பளம் என்பது சாதாரண ஒரு தொழிலாளிக்கு கொடுக்கும் சம்பளம் கூட எமக்கு இல்லை என்றே கூற வேண்டும் என தெரிவித்து மேற் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (9-299)

# தமிழ் மக்களுக்குரிய மயானத்தை உரிமை கோரும் சிங்கள மக்கள்

(நெளுக்குளம்)

வவுனியா சிதம்பரபுரம் கிராமத்தில் உள்ள நான்கு கிராம மக்கள் பயன்படுத்தும் மயானத்தினை சிங்கள மக்கள் தமக்குரியது என உரிமை கோருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா எல்லையோர கிராமமான சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள பொது மயானம் கற்குளம் படிவம் 1, 2 சிதம்பரபுரம், சிதம்பரநகர் கிராம மக்கள் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து பயன்படுத்தி வந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த மயானத்தில் இம் மக்கள் தமது கிராமத்தில் இறந்தவர்களை புதைத்தமைக்கான நினைவுக்கற்களையும் நாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்த குறித்த பொது மயானத்திற்கு அருகில் உள்ள சிங்கள மக்கள் காணிகளை அடாத்தாக பிடித்து குடியேறி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பொது மயானத்தினை அப்பகுதி தமிழ் மக்கள் துப்புரவு செய்துகொண்டிருந்த போது அங்கு வந்த சிங்கள மக்கள் குறித்த காணி தமக்குரியது எனவும் துப்புரவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்திருந்ததாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதிக்கு வருகைதந்த சிங்கள பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குறித்த காணியில் எவ்வித வேலைகளையும் செய்ய வேண்டாம் எனவும் இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபையில் கலந்துரையாட வேண்டியுள்ளதால் தமிழ் கிராமத்தவர்கள் சார்பில் தமது பிரதேச சபைக்கு வருமாறு தெரிவித்து சென்றிருந்ததாகவும் கூறினர்.

இந்நிலையில் குறித்த மயானம் தொடர்பான விடயம் பெரும் முறுகல் நிலையை தோற்றுவித்துள்ளது. (9-299)

பாரதம்

# இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டம்

## அல்கொய்தா எச்சரிக்கை



(டில்லி)

இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என அல்கொய்தா அமைப்பின் தலைவரான அய்மான் அல் ஜவாஹிரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அல்கொய்தா அமைப்பினர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

குறித்த காணொலியில், 'இந்திய இராணுவத்தினருக்கும், காஷ்மீர் அரசுக்கு எதிராகவும் போராட வேண்டும்.

இந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைத்து மனித இழப்புக்களை ஏற்படுத்த வேண்டும்' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்கொய்தா இயக்கத்தினர் இழந்த நிலங்களை மீட்பதற்காகவே காஷ்மீர், பிலிப்பைன்ஸ், மத்திய ஆசிய நாடுகளில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறித்த காணொலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காஷ்மீரில் செயற்பட்டு வரும் தீவிரவாத அமைப்புகளை உற்சாகப்படுத்தவே இந்தக் காணொலி வெளியிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (7)

# பப்புவா நியூகினியாவிலுள் கர்ப்பிணிகள் உட்பட 25 பே

(பப்புவா நியூகினி)

பப்புவா நியூகினியில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் உட்பட 25 ற்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பப்புவா நியூகினியின் ஹெலா மாகாணத்தில் பழங்குடியினத்தவர்களிற்கு இடையில் இடம்பெற்றுவரும் தொடர் மோதல்களின் போதே இந்த படுகொலைகள் இடம் பெற்றுள்ளன.

டரிபொரி மாவட்டத்தின் இரு கிராமங்களில் இந்த படு கொலைகள் இடம்பெற்றுள்ளன.

முனிமா கிராமத்திலும் கரிடா கிராமத்திலும் இடம் பெற்ற இப்படுகொலையில் இரு கர்ப்பிணிப் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலைகளில் ஈடுபட்டவர்களை கைதுசெய்வதாக உறுதியளித்துள்ள பப்புவாநியூகினியின் பிரதமர் ஜேம்ஸ் மராப்பே தனது வாழ்க்கையின் மிகவும் துயரமான நாள் இது என கவலை வெளியிட்டுள்ளார்.

நான் காலையில் எழுந்து எனது சமையலறைக்கு சென்றவேளை துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன சில வீடுகள் எரிந்துகொண்டிருந்தன என கரிடா உப சுகாதார நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள பிலிப் பிமுவா என்ற நபர் தெரிவித்துள்ளார்.

நான் எதிரிகள் கிராமத்திற்கு வந்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து அங்கிருந்து தப்பியோடி மரங்களிற்குள் ஒளிந்திருந்தேன் என



# கர்நாடகாவில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி; சோனியா, ராகுல் நேற்று ஆர்ப்பாட்டம்




(டில்லி)

கர்நாடகாவில் ஆட்சியை கவிழ்க்க முயற்சிக்கும் பாரதிய ஜனதாவை கண்டித்து பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு சோனியா, ராகுல் உள்ளிட்ட தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடகாவில் நடந்து வரும் காங்கிரஸ்-மதசார்பற்ற ஜனதா தளம் கூட்டணி ஆட்சியை கவிழ்க்கும் முயற்சிகளில் பா.ஜனதாவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கோவாவிலும் 10 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் நேற்றுமுன்தினம் திடீரென பா.ஜனதா பக்கம் இழுக்கப்பட்டனர்.

பா.ஜனதாவின் இந்த நடவடிக்கைகளுக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கடும் கண்டனமும், எதிர்ப்பும் தெரிவித்துள்ளது. கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 10 பேர் மும்பையில் உள்ள நட்சத்திர விடுதியில் தங்கி இருப்பதற்கு எதிராகவும் வழக்கு தொடர்ந்துள்ளது.

இதற்கிடையே கர்நாடகா- கோவா மாநிலங்களில் காங்கிரஸை அழிக்கும் முயற்சிகள் நடப்பதாக கூறி காங்கிரஸ் கட்சியினர் நேற்று பெங்களூரிலும், டில்லியிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காந்தி சிலை முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் சோனியா-ராகுல் கலந்து கொண்டனர். காங்கிரஸ் எம்.பி.க்கள், சிரேஷ்ட நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். (7)


# சிரியாவில் கண்ணி 7 குழந்தைகள் பரிதா

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் விட்டுச்சென்ற கண்ணிவெடியில் சிக்கி எதுவுமறியாத அப்பாவிக் குழந்தைகள் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்த உள்நாட்டுப்போரைப் பயன்படுத்தி அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள்கால்பதித்தனர். அங்கு டெயிர் அல் ஜோர் மாகாணத்தில் உள்ள



டப்லான் நகரம், ஐ.எஸ். பயங்கரவாதிகள் வசம் இருந்து வந்தது.

# ஜனாதிபதி ட்ரம்பை கடுமை அமெரிக்காவுக்கான பிரிட்ட



(லண்டன்)

டொனால்ட் ட்ரம்ப்பை பற்றி கடுமையாக விமர்சித்த ரகசியம் அம்பலமாகி சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் அமெரிக்காவுக்கான பிரிட்டன் தூதர் கிம்டர்ரோச் தனது பதவியை நேற்று இராஜினாமா செய்தார்.

அமெரிக்காவுக்கான பிரிட்டன்

# படகு விபத்து மூவர் உயிரிழப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் கடற்பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

சிட்னிக்கு வடக்கே 160 கி.மீ (100 மைல்) தொலைவிலுள்ள நியூகேஸில் நேற்று வியாழக்கிழமை இந்த படகு விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனைத்தொடர்ந்து விபத்து இடம்பெற்ற பகுதிக்கு விரைந்த அவசர மீட்புப் படையினர் இரு வரைக் காப்பாற்றியுள்ளனர்.

அத்துடன், குறித்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# வெளிநாடு

## லுள்ள இருகிராமங்களில் 5 பேர் வெட்டிப்படுகொலை!



மேலும் தெரிவித்துள்ள அவர்.நான் திரும்பி வந்து பார்த்தவேளை உடல்கள் துண்டுதுண்டாக வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட் டிருந்தன எனவும் தெரிவித்துள்ளார். (7)

## ணிவெடியில் சிக்கி ரிதாபமாக உயிரிழப்பு



கடந்த ஆண்டு உள்நாட்டுப் படையினர் அந்த நகரத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் பிடியில் இருந்து விடுவித்தனர்.

இந்த நிலையில் அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் புதைத்து விட்டு சென்ற கண்ணிவெடிகளில் சிக்கி அப்பாவி மக்கள் பலியாவது தொடர்கதை ஆகிவருகிறது.

அங்கு நேற்று முன்தினம் ஐ.எஸ். பயங்கரவாதிகள் விட்டுச் சென்ற கண்ணிவெடியில் சிக்கி அப்பாவிக் குழந்தைகள் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் உடல் சிதறி உயிரிழந்தது நெஞ்சை நொறுக்குவதாக அமைந்தது. (7)

## மையாக விமர்சித்து கடிதம்; ட்டன் தூதுவர் இராஜினாமா

நாட்டின் தூதரான கிம் டர்ரோச் பிரிட்டன் அரசுக்கு அனுப்பிய இரகசியக் கடிதம் அண்மையில் எப்படியோ கசிந்து விட்டது.

அந்தக் கடிதத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பையும், அவரது அரசையும் கிம் டர்ரோச் கடுமையான வார்த்தைகளால் விமர்சித்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தகுதியற்றவர். பாதுகாப்பற்ற நிலையிலேயே அவர் இருக்கிறார். வெள்ளை மாளிகையில் உட்பூசல், குழப்பம் ஆகியவை நிலவுவதாக வெளியாகும் செய்திகளை ட்ரம்ப் மறுக்கிறார். ஆனால், அவையெல்லாம் உண்மையான செய்திகள்தான். வெள்ளை மாளிகை செயற்படாத நிலையிலேயே இருக்கிறது. அவமானத்தை சுமந்தபடியே ட்ரம்ப் அரசின் பதவிக்காலம் முடியப்போகிறது' என தனது கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரகசிய கடிதம் வெளியானதால், அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விமர்சனத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும் பதிலடி கொடுத்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பற்றிய பிரிட்டன் தூதரின் பகிரங்க விமர்சனத்தால் இருநாட்டு உறவுகளும் பாதிக்கப்படும் அபாயம் உருவாகி உள்ளது.


இந்நிலையில், அமெரிக்காவுக்கான பிரிட்டன் தூதர், கிம் டர்ரோச் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். (7)

## ஆப்கானில் அரச படைகள் தாக்குதல் 20 பயங்கரவாதிகள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் குன்டுஸ் மாகாணத்தில் அரச படைகள் வான்வழி மற்றும் தரைவழியாக நடத்திய தாக்குதலில் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த 20 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு மேற்குப் பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய பயங்கரவாதக் குழுக்களின் ஆதிக்கம் அண்மைக்காலமாக மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.



சில பகுதிகளைக் கைப்பற்றி அங்கு உள்ளூர் வரி விதிப்பு உள்ளிட்ட நிர்வாகங்களை தங்கள் வசப்படுத்தியுள்ள தலிபான்கள் போட்டி அரசாங் கத்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள குன்டுஸ் மாகாணத்தின் இமாம் சாஹிப் மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் ஆப்கானிஸ்தான் விமானப்படை மற்றும் தரைப்படைகள் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த 20 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர். (7)

### நீடிக்கும் போர்ப் பதற்றம்

## ஈரானியப் படகுகளை விரட்டியடித்த பிரித்தானிய எண்ணெய்க் கப்பல்

(பிரிட்டன்)

பிரித்தானிய எண்ணெய் கப்பல் ஒன்றினை சிறைபிடிக்கும் ஈரானின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. பிரித்தானிய எண்ணெய்க்கப்பலொன்றை ஹோர்மூஸ் நீரிணையில் படகுகளில் வந்த ஈரானியப் படையினர் இடைமறிக்க எடுத்த முயற் சியே இவ்வாறு தோல்வியில் முடிவடைந்துள்ளது.

பிரித்தானிய கடற்படையினரின் HMS Montrose என்ற போர்க் கப்பலின் உதவியுடன், ஈரானிய படையினருக்கு சொந்தமான படகுகள் விரட்டியடிக்கப்பட்டதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.



குறித்த பிரித்தானிய எண்ணெய்க் கப்பலை ஈரானிய நீர்ப் பரப்புக்கு அருகிலேயே நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

எனினும் பிரித்தானியாவின் சிறியரக போர்க்கப்பலொன்றின் எச்சரிக்கையை அடுத்து ஈரானிய படையினரின் படகுகள் பின்வாங்கியுள்ளன.

கடந்த வாரம் ஜிப்ரால்டர் கடற்பிராந்தியத்தில் பிரித்தானிய கடற்படையினரால் ஈரானிலிருந்து புறப்பட்ட எண்ணெய்க் கப்பலொன்று கைப்பற்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு பதிலடி கொடுப்போம் என ஈரான் தெரிவித்திருந்த நிலையில் குறித்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளுக்கு நாள் ஈரானுக்கும், பிரித்தானியாவிற்கும் இடையிலான போர்ப் பதற்றம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஹோட்டலில் வாயுக்கசிவு 46 பேர் வைத்தியசாலையில்

(டொரன்ரோ)

கனடாவில் வின்னிபெக் மெனடோபா பகுதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் காபன் மொனக்சைட் வாயு கசிந்தமையால் 46 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வாயுக்கசிவின் காரணமாக 46 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அதில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற போது 52 பேர் ஹோட்டலில் இருந்துள்ள நிலையில் அவர்களில் பணிபுரிபவர்கள் மற்றும் ஒரு நாயும் இருந்துள்ளது.

மேலும், வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட 46 பேரில் 15 பேர் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். 5 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர். (7)

# தெரிவுக்குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டால் சாட்சியமளிக்க ஜனாதிபதி முன்வர வேண்டும்

## ஹிருணிகா கோரிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்காக பிரதமருக்கு அழைப்பு விடுத்தால், அவர் சென்று வெளிப்படைத் தன்மையுடன் தானறிந்த தகவல்களை வழங்குவார். அதேபோன்று விசாரணைகளுக்காக முன்னிலையாகுமாறு தெரிவுக்குழுவால் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், அவரும் சாட்சியம் வழங்க முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கோரிக்கை விடுத்துள்ளார்.**



அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் ஆட்சி அமைத்த பின்னர் நிலுவையில் இருந்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வழக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதனூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்திருக்கிறது என்று நான் நம்புகின்றேன். என்னுடைய தந்தை கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாக வைத்து மாத்திரம் இதனைக் கூறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (7)

தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் இழந்த உறவுகளை மீண்டும் பெற்றுக் கொடுக்க முடியாது. இழப்பீடுகள் வழங்குவதன் மூலம் அவர்களின் இழப்புக்களை முழுமையாக ஈடுசெய்ய முடியாது.

எனவே இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களை அவர்கள் முன்னிறுத்துவதே தற்போது அவர்களுக்கு நாம் வழங்கக்கூடிய ஒரே ஆறுதலாகும் என்றும் தெரிவித்தார்.

# கண்டியில் எசல பெரஹறாவுக்காக பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

(கண்டி)

கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹரவுக்கான பாதுகாப்பு வேலைத்திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.



கண்டி நகரத்தை பல வலயங்களாகப் பிரித்து இந்தப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி எசல பெரஹராவின் ஆரம்ப நிகழ்வு அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கும்பல் பெரஹறா ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. றன்தோலி பெரஹறா ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 15 ஆம் திகதி பிற்பகல் இடம்பெறும் பெரஹறாவை அடுத்து தலதாமாளிகை பெரஹறா வைபவம் நிறைவடைய உள்ளது.

இந்த பெரஹறா தொடர்பான பாதுகாப்பு விடயங்கள் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (7)

# சட்டவிரோத நடவடிக்கைகள்; 11 பேர் கடற்படையால் கைது

(திருமலை)

கிழக்கு மாகாணக் கடற்படையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கடற்பகுதியில் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட 11 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் கடற்படை தெரிவித்துள்ளது.

தடைவிதிக்கப்பட்ட மீன்பிடிவலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத செயல்களின் காரணமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 600 வலி நிவாரண குளிசைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கொடுத்ததை வாங்கக் கூடாது

புதுக்கோட்டைக்குப் பக்கத்திலே மிதிலைப் பட்டனம் என்று ஒரு ஊர். அங்கே அழகிய சிற்றம்பலக்கவிராயர் என்று ஒருத்தர் இருந்தார். ஒருநாள் அவர் மிகவும் தூரத்துக்கு அப்பாலுள்ள இன்னொரு ஊருக்கு ஒரு கல்யாணத்துக்காகப் போயிருந்தார். கல்யாணம் முடிந்தது. திரும்பி ஊருக்கு வரவேண்டும். அப்போதெல்லாம் பேருந்து வசதி ஏது? வண்டியில் தான் வரவேண்டும். ஒரு இரவு ஆகும் வந்து சேருவதற்கு. ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து எவ்வளவு ரூபாய் என்று கேட்டார்? 3 ரூபாய் கொடுங்கள். ஊருக்குப் போய் சேருகின்றபோது விடிந்து விடும். அதனால் நாளை காலையில் சாப்பாடு கொடுத்து அனுப்பி விடுங்கள். அதுபோதும் என்றார். சரியென்று ஒத்துக் கொண்டார். இரவு வண்டி புறப்பட்டது. கவிராயர் அதிலே காலை நீட்டிப்படுத்துக்கொண்டார். நல்ல நிலாவெளிச்சம். வண்டிக்காரன் ஆனந்தமாக பாட்டுப் பாடிக்கொண்டே போகின்றான். கவிராயரும் ரொம்ப சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகின்றார். வண்டி போய்க்கொண்டே இருக்கிறது.

வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான். நீங்கள் யார்? உங்களைப்பற்றிச் சொன்னால் நானும் கேட்டுக்கொண்டே வருவேன் என்றார். கவிராயரும் தன்னுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தார். நான் இருப்பது மிதிலைப்பட்டிதான். எங்களுடைய முன்னோர்கள் எல்லாம் பெரிய வித்துவான்கள். நிறைய நூல்களெல்லாம் கூட எழுதியிருக்கிறார்கள். ஆரம்பத்திலே அவர்கள் சேலத்திற்குப் பக்கத்திலே ஒரு ஊரில் இருந்தார்கள். அந்தக்காலத்திலே அந்த ஊரில் ஜமீன்தார் இருந்தார். வெங்களப்ப நாயக்கர் என்று பெயர். அவர் தான் இந்த மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களுக்குக் கொடுத்தார். அது சம்பந்தமான 'சாசனம்' கூட இப்ப எங்கள் வீட்டிலே இருக்கின்றது. எங்களுக்கு இப்ப ஜீவாதாரமாக இருப்பது அதுதான். நாங்கள் இன்று கஷ்டம் இல்லாமல் நல்லபடியாக இருக்கின்றோம் என்றால் அதற்குக் காரணம் வெங்களப்ப நாயக்கர் தான்.

அவருடைய அன்னத்தைத்தான் இப்ப நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம். அவர் போட்ட சோறு அது. இப்படி சொல்லிக் கொண்டே வந்தார் பொழுது விடிந்தது. வண்டி மிதிலைப்பட்டிக்கு வந்து சேர்ந்தது. கவிராயர் இறங்கினார். வீட்டு வேலைக்காரனை கூப்பிட்டார். வண்டிக்காரனுக்கு பழையது கொண்டு வந்து கொடு என்றார். அப்போது வண்டிக்காரன் ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான் போய் வருகின்றேன் உத்தரவு கொடுங்கள் என்றான். நீ ஊருக்குப் போய் சேருவதற்குள் ரொம்ப நேரமாகிவிடும். சாப்பிட்டுப் போ என்றார். இல்லை, இப்ப எனக்குப் பசியில்லை என்றான் அவன்.

"சரி...இந்தா வண்டி வாடகை" என்று சொல்லி மூன்று ரூபாயை நீட்டினார். "இது உங்களிடமே இருக்கட்டும். எனக்கு வேண்டாம். நான் போய் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

"என்னப்பா இது...மூன்று ரூபாதானே பேசினது. இன்னும் அதிகமாக ஏதாவது வேண்டுமா? என்றார் அவர்.

அதெல்லாம் ஒன்றும் இல்லை! நீங்க ஒன்றும் தப்பா நினைத்துக் கொள்ளக்கூடாது!" என்று சொல்லிவிட்டு கம்பீரமாக அவன் புறப்பட்டான். "என்ன காரணம் என்றாவது சொல்லிவிட்டுப் போப்பா" என்றார் கவிராயர். அப்பதான் வண்டிக்காரன் சொன்னான், "ஐயா! நேற்று ராத்திரி உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக்கொண்டு வந்தீங்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிலே பிறந்தவன் தான் நான்!

ஏதோ என் தலைவிதி இப்படி வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். எங்க வீட்டு பெரியவங்க என்ன சொல்வார்களென்றால், என்னதான் ஆனாலும் சரி கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது என்று சொல்லுவார்கள்.

எங்க முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்திலேயிருந்து ஒரு சின்னத் துரும்பைக்கூட திருப்பி வாங்கிறதுக்கு என்னுடைய மனசு இடம் கொடுக்கவில்லை மன்னித்துக்கொள்ளுங்கள்.

ஏதோ இந்த அளவுக்காவது நான் உங்களுக்கு உபயோகப்படுகிற மாதிரி கடவுள் கருணை காட்டினாரே! அது என்னுடைய பாக்கியம்" என்று சொல்லி விட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு அந்த ஆள் போய்விட்டான்.

இப்ப நீங்க கேட்டது கற்பனைக் கதை இல்லை! நிஜமாக நடந்தது. இந்தச் சம்பவத்தை அந்தக் கவிராயர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரிடம் சொல்லியிருக்கிறார். இந்த குறிப்பை ஒரு சின்ன புத்தகத்திலே பார்த்தேன். அதை என் நண்பர் ஒருத்தரிடம் கொடுத்து படித்துவிட்டுக் கொடுங்கள். கொஞ்ச நாள் கழித்து அவர் மட்டும் வந்தார். புத்தகம் வரவில்லை. நான் அதை கண்டுக்காமல் என்னங்க அதைப் படித்துப் பார்த்தீங்களா? என்றேன்.

"படித்துப் பார்த்தேன். வெங்களப்ப நாயக்கர் பரம்பரை மாதிரியே நானும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து விட்டேன். என் பரம்பரைக்காக புதுசா ஒரு கொள்கையே வகுத்துக்கொண்டேன்" என்றார். "என்னங்க அது?" என்றேன்.

"கொடுத்ததை திருப்பி வாங்கக் கூடாது என்பது அவர்கள் கொள்கை. வாங்கினதை திருப்பிக் கொடுக்கக்கூடாது என்பது எங்கள் கொள்கை!" என்றார்.

நானும் அவரிடம் கொடுத்த புத்தகத்தை அந்த விநாடியே மறந்துவிட்டேன்.

# ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்

## இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்து

(டில்லி)

**ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இலங்கை அரசு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் அமைதி திரும்பவும், இனப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணவும் மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கையில் போர் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில், அங்குள்ள தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து சமுதாயத்தினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வு காண வாய்ப்பை மத்திய அரசு வழங்கியது.

அனைத்துக் கட்சிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தி, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது உள்ளிட்ட அதிகாரப் பகிர்வுக்கான உறுதியான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் குறித்து இந்திய அரசு வலியுறுத்தி உள்ளது.

தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியம் ஆகிய விருப்பங்களைத் தீர்க்கும் வகையில், ஒரு தீர்விற்கும், தேசிய சமரசத்துக்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் இலங்கை அரசினையும், அரசியல் கட்சிகளிடமும் இந்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காக அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் என மேலும் தெரிவித்தார்.(7)

# 4000 பேருக்கு ஒக்டோபரில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2016 மற்றும் 2017 உயர்தரப் பெறுபேறுகள் பிரகாரம் கல்வியியற் கல்லூரிகளுக்கு செப்டெம்பர் முதல் வாரத்தில் ஆசிரிய பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அத்தோடு ஏற்கனவே கல்வியியற் கல்லூரிகளில் பாடநெறிகளை நிறைவு செய்த 4000 பேருக்கு ஒக்டோபரில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடத்தப்படும் மூன்றாண்டு கால போதனா கல்வி பாடநெறியை பயில்வதற்காக 2016 மற்றும் 2017 உயர்தரப் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது.

இதன்பிரகாரம் நாடளாவிய ரீதியில் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளுக்கு 4000 மாணவர்கள் வீதம் இரு குழுக்கள் (8000 மாணவர்கள்) சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் ஊடாக நடத்தப்படும் பாடநெறிகளுக்காக செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி 2019.01.25 இலக்கம் 2108 சுற்றுநிருபத்தின் பிரகாரம் கல்வியியற் கல்லூரி பாடநெறிகளுக்காக 68,000 பேர் விண்ணப்பம் செய்துள்ளதுடன், அவர்களில் 28,000 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் 19 கல்வியியற் கல்லூரிகளில் பாடநெறிகளை நிறைவு செய்த 4000 பேருக்கு ஒக்டோபர் மாதமளவில் ஆசிரிய நியமனம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.(7)

# மொனராகலை விபத்தில் ஆசிரியர் உயிரிழப்பு





(மொனராகலை)

மொனராகலை - கொழும்பு பிரதான வீதியில் ஹொரெம்புவ கந்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாமல் லொறி ஒன்றுடன் மோதியதாலேயே நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த விபத்து சம்பவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் கும்புக்கென 7ஆம் ஏக்கர் பகுதியைச் சேர்ந்த குசேலன் கேதீஷ்வரன் (வயது 26) என்ற ஆசிரியரே உயிரிழந்துள்ளார். இவர், அலியாவத்தை தமிழ் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வந்துள்ளார். விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)




### சந்தக்கவி உமக்கு சமர்ப்பணம் அம்மா!

மயிலவன் அன்னையே!
மாலவன் சோதரியே!
நயினையம் பதியமர்ந்து
நல்லாட்சி புரிபவளே! - கணவருடன்
கையிலைக் காட்சி தந்து
கண் பனிக்க செய்தவளே!
மயிலையில் முண்டக கண்ணியாய்
மாங்காட்டு மாரியாய்
துயிலும் இடமெல்லாம்
சொப்பனத்தில் வருபவளே!
வெயில், மழை பாராமல் - அருள்
வேண்டி வருவோர்க்கு
அரவக்குடையின் கீழ்
அமுதம் சுரப்பவளே! - இச்
சந்தக்கவி உமக்கு சமர்ப்பணம் அம்மா!

**தம்பாட்டியூர் க.தவபாலன்**

### ஏகசக்தி நீயே!

நாகம்தனில் வீற்றிருக்கும் நாயகியே
பூகம்பம் வரும் எம் மக்கள் வாழ்வுதனில்
ஏக சக்தியாக முன்னின்று காப்பவளே!
அன்னை பராசக்தியே நாகபூஷணி அம்மா

அல்லல் படும் தமிழ் மக்களுக் கோர்
தனி அருள் கிட்ட வழி காட்டுவாய்
துன்பம் துயரம் நீங்க நிதமும் துதிக்கும்
எமக்கு நல்லருள் தாரும் நாகபூஷணி அம்மா

**கொற்றாவத்தை காந்திமதிநாதன்**

### ஆயிரம் கண் கொண்டவளே

நல்ல பாம்பு குடைபிடிக்க
நாடி வரும் பக்தர் குறை தீர்க்க
நித்திலம் போற்றும் நாயகியே
தலை விரித்தாடும் "போதை சமுதாயத்தை"
அடியோடு சரித்திட உன்
அருட்பார்வை வீசாயோ?

**வ.பவளகேசி**
**கொய்யாத்தோட்டம்**

### மாதேவி கல்யாணி வாழ வைப்பாய்

எண்டிசையும் புகழ்பரப்பும் எங்கள் அன்னை
எழிலா இதயத்தோடிறைஞ்சி ஏத்தும்
பண்பு நிறை பக்தர்களின் பக்தி கண்டு
பாசமிகு தாயாகப் பாரில் வந்து
தண்டமிழைத் தரணிதனில் தரமாய் வைத்து
சமத்துவமாய் தமிழரினம் வாழ வேண்டும்
வண்டாடும் வண்ணமலர்த் தண்டிகையில் ஏறுமெங்கள்
மாதேவி கல்யாணி வாழ வைப்பாய்

**திலகவதி ஆறுமுகம்**

# பனம்சார் உற்பத்தி முயற்சிகளுக்கு உதவி விசேட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு

## வடக்கு அபிவிருத்தி செயலாளர் தகவல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வாழ்வாதார மேம்பாட்டுக்கு பனை சார்ந்த துறை ஒரு முக்கியமான துறையாகக் காணப்படுகின்றது. வட மாகாணத்தில் 11 மில்லியன் பனைமரங்கள் இருந்தபோதும் முழுப்பொருளாதார நன்மைகளையும் பனைசார் உற்பத்திப் பொருட்களிலிருந்து அடைய முடியாதிருப்பது துரதிர்ஷ்டவசமாகும். மாசி மாதம் முதல் ஆவணி வர்ரையான பருவகாலப் பகுதியில் பதநீர் உற்பத்தி மிக அதிகளவாக காணப்படுகின்றது. பனைசார் உற்பத்திகளில் தங்கி வாழும் குடும்பங்கள் வறுமையின் தாக்கத்தினை அதிகமாகக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். பதநீரின் பருவகால தன்மை காரணமாகவும், அதனை பருவகாலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பாதுகாக்கும் வசதியின்மை காரணமாகவும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களாக மாற்றுதல் தொடர்பான அவதானமின்மையும் பனைசார் துறையில் வளங்களையும் பத நீரையும் உச்சமட்டத்தில் பயன்படுத்தாமைக்கு காரணமாகும் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் சீவல் தொழிலாளர்களுக்கு போதிய வருமானமின்மையும் பருவகாலத்தன்மை கொண்ட இவ்வுற்பத்திப் பொருட்களிலிருந்து நிரந்தர வருமானத்தைத் பெற முடியாதிருப்பதும் சீவல் தொழில் தொடர்பாக சமூக அங்கீகாரமற்ற தன்மை காரணமாகவும் கடந்த காலங்களில் சீவல் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை ஒரு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. எனினும் வடமாகாணத்திலுள்ள பனை மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில் 7500 க்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் அங்கத்தவர்களாக உள்ளதுடன் அவர்களை ஊக்கப்படுத்தி வலுப்படுத்த வேண்டியுள்ளது. அண்மையில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பனை மேம்பாட்டுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டிய அவசியத்தையும் தங்களது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தினர். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பனையை அடிப்படையாகக் கொண்ட பனங்கட்டி, பனம் வெல்லம், பதநீரினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை விருத்தி செய்யவும் அவ் உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த மற்றும் உலகளாவிய சமூகத்தினரிடம் அதிக தேவை இருப்பதனால் அவற்றை விருத்தி செய்ய வேண்டுமெனவும் அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பனைசார் உற்பத்திப் பொருட்கள், மருத்துவ குணங்கள் மற்றும் ஊட்டச் சத்துக்களை கொண்டதாக காணப்படுகின்றன. தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வட மாகாண் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு செயற்பாட்டிலுள்ள பனை மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களை அடையாளம் கண்டு அவற்றிற்கு பன்ங்கட்டி, பனம் வெல்லம் போத்தலில் அடைத்த பதநீர், போத்தலில் அடைத்த கள்ளு மற்றும் பனைசார் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தரத்தினையும் உற்பத்தியினையும் மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இதனால் மிகையான பதநீர் மற்றும் கள்ளினை பழுதடையாது பேணிப்பாதுகாத்து பருவமற்ற காலங்களில் சந்தைப்படுத்த முடியும். இந்தப் பதநீரில் அத்தியாவசியமான விற்றமின்களும் தாதுப் பொருட்களும் இருப்பதாக நம்பப்படுவதுடன் இது ஊட்டச்சத்து மிக்க இயற்கைத் தயாரிப்பாகும்.

மேலும், பதநீர் அடிப்படையிலான தயாரிப்புக்களான பனை வெல்லம், பதநீர், கல்லாக்காரம் மற்றும் போத்தலில் கள் அடைத்தல் போன்றவற்றை புதிய தொழில்நுட்பத்தின் மூலம் தயாரிப்பதற்காக விசேடமாக ரூபா 100 மில்லியன் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார். எமது அமைச்சு மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகங்கள், பனை மேம்பாட்டுக் கூட்டுறவுச். சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றுடன் இணைந்து வெல்லம், பதநீர், கல்லாக்காரம் மற்றும் போத்தல்களில் கள் அடைத்தல் போன்றவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளை இவ்விசேட ஒதுக்கீட்டின் மூலம் வழங்கவுள்ளது. இது பனைசார் துறையில் அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பினை வழங்குவதுடன்பனையை வாழ்வாதாரமாகக் கொண்ட சமூகம், பனையை நம்பி வாழ்கின்ற குடும்பங்கள் மற்றும் உள்நாட்டு,வெளிநாட்டு சந்தைகள் போன்றவற்றில் கணிசமான பங்களிப்பினை செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் நவீன பனை வெல்லம் உற்பத்தி, கள் மற்றும் பதநீர் போத்தலில் அடைத்தல், கல்லாக்காரம் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப வசதிகளை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்தார். (7)

# 2016 ஆம் ஆண்டின் பின்னர் இஸ்லாமியத் தண்டனை முறைகள் பாடப்புத்தகங்களிலிருந்து நீக்கம்

## ஹக்கீம் தகவல்



(கொழும்பு)

இஸ்லாமியப் பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள தண்டனைகளை முஸ்லிம் நாடுகள் கூட கைவிட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு முதல் இஸ்லாமியத் தண்டனை முறைகள் தொடர்பான பாடம் நீக்கப்பட்டுள்ள நிலையில் இனியும் இதனை சர்ச்சைக்குரியதாக முன்னெடுக்க முடியாதென விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ள நாடுகளில் இஸ்லாமியத் தண்டனைகளை நிறைவேற்ற முடியாது என்றும் இங்கு அவ்வாறு ஒருபோதும் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டது கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க மற்றும் வெளியீட்டு ஆணையாளர் நாயகம் ஜெயந்த விக்கிரமநாயக்க ஆகியோர் சாட்சியமளித்தனர். இதன் போது கருத்து வெளியிடுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தெரிவுக்குழு விசாரணையில் இஸ்லாமிய பாடப் புத்தகங்களில் மதம்மாறியவர்களுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளதாக அளிக்கப்பட்ட சாட்சியம் தொடர்பில் இவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களது சாட்சியங்களின் இடைநடுவில் இது தொடர்பில் தெளிவுபடுத்திய ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது.

2016 ஆம் ஆண்டின் பின்னர் குற்றமும் தண்டனையும் பாடம் ஏன் பாடப்புத்தகத்திலிருந்து அகற்றப்பட்டது என்பது தொடர்பில் ஆசிரியர் குழு தெளிவுபடுத்தியுள்ளது. இஸ்லாம் மார்க்கத்தை அரசாங்க மார்க்கமாக பின்பற்றும் நாடுகளில் சிலவற்றில் மாத்திரமே பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் அமுல்படுத்தப்பட்டது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை (ஐ.சி.சி.பீ.ஆர்) ஏற்ற முஸ்லிம் நாடுகளும் இந்தத் தண்டனைகளை கைவிட்டுள்ளன. ஒருசில நாடுகளில் மாத்திரம் தான் இவ்வாறு தண்டனை வழங்கப்படுகிறது. காலத்துக்கு காலம் மாறும் சட்டங்களுக்கு அமைய பல நாடுகள் இவ்வாறு தண்டனை வழங்குவதை கைவிட்டுள்ளன. முஸ்லிமல்லாத நாட்டில் இந்தத் தண்டனை பொருத்தமற்றது என்பதால் அதனைப் பாடப்புத்தகத்திலிருந்து அகற்ற ஆசிரியர் குழு முடிவு செய்துள்ளது. இந்த விடயத்தை சர்ச்சைக்குரிய விடயமாக இனியும் தொடர முடியாது. தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சாட்சியமளிக்க வந்த ஒருவர் முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும் குற்றம் சுமத்திச் சென்றார். இங்கு இந்த தண்டனைகள் அமுல்படுத்தப்படுவதாக அவர் காண்பிக்க முயன்றார். இங்கு ஒருபோதும் இவ்வாறான தண்டனை அமுல்படுத்தப்பட்டது கிடையாது என மேலும் தெரிவித்தார். (7)

# பதவியை இராஜினாமா செய்யாதீர்கள்! மகிந்த தேசப்பிரியவிடம் பிரதமர் வேண்டுகோள்



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் பல தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டட வளாகத்தில் மகிந்த தேசப்பிரியவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமையானது அரசியலமைப்பு மீறலாகும். தொடர்ந்தும் தேர்தலை காலதாமதப்படுத்துவதானது. அதிகாரப் பரவலாக்கத்தையும் கேள்விக்குட்படுத்துவதோடு மாகாணசபைமுறைமையை அரசியலமைப்பிலிருந்து நீக்குவதற்கான கோரிக்கையையும் மேலெழச் செய்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு நடத்தப்படாத பட்சத்தில் அதற்கான பொறுப்பினை ஏற்று ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக மகிந்த தேசப்பிரிய அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வேண்டுகோளை அவரிடம் விடுத்துள்ளார். (7)

# சர்வதேசத்திற்கு ஏற்ப செயற்பட அரசாங்கம் கடுமையான முயற்சி

## சாந்த பண்டார குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் இறுதிக் கால கட்டத்தில் நாட்டை சர்வதேசத்திற்கு காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகள் அரங்கேற்றப்படுவதாகவும் இதன் ஒருகட்டமாகவே புதிய காணிச் சட்டத்தை திருட்டுத்தனமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.


கொழும்பு. டார்லி வீதியில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இந்த அரசாங்கம் இறுதிக் கட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இக்கட்டத்தில் பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் சர்வதேச நாடுகளுக்குத் தேவையானவற்றைநிறைவேற்றி நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வேலைத் திட்டங்களையும் அரசாங்கம் செய்து வருகிறது. அதன் ஒருகட்டமாகவே காணி தொடர்பிலான புதிய சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முற்படுவதாகும். ஆனால், எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனாதிபதியின் கடுமையான எதிர்ப்பால் அச்செயற்பாட்டை அரசு இடைநிறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் அனுமதியும், அமைச்சரவையின் அனுமதியுமின்றி இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது. திருட்டுத்தனமாக மாத்திரமே இதை அவர்களால் செய்ய முடியும். 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் காணி தொடர்பிலான விவகாரங்கள் குறித்து மாகாண சபைகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தி இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். என்றாலும், தற்போது மாகாண சபைகள் செயற்பாட்டில் இல்லை. ஆயுள் முடிவடையாதுள்ள ஊவா மாகாண சபை உட்பட ஏனைய மாகாண ஆளுநர்கள் இச்சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மாகாண சபைகளின் இணக்கப்பாடின்றி மேற்படி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவும் 13ஆவது திருத்தச் சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே உள்நாட்டுக்கு ஏற்றவகையில் மக்களின் எதிர்கால நலனைச் சிந்தித்து இச் சட்டமூலம் மறுசீரமைக்கப்பட்டு கொண்டுவரப்படும் பட்சத்தில் ஆதரவளிக்கத் தயார் என மேலும் தெரிவித்தார். (7)

# ஆசிரியர் கல்வி குறித்து ஆழ அகலச் சிந்திப்போம்



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர், கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3. கல்விமாணிக் கற்கையை பூர்த்தி செய்பவர்களை மட்டுமே ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கத்தக்க வகையில் சேவைப்பிரமாணக் குறிப்புக்கள் திருத்தப்படவேண்டும்.

4. பிராந்தியங்களை மையப்படுத்தி பல்கலைக்கழகங்களில் கல்விப் பீடங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்போது கல்வியியல் தொடர்பான கற்கைகளை வழங்கிவரும் பேராதனை, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் துறைகள் பொதுக் கொள்கையின் அடிப்படையில் பீடங்களாக தரமுயர்த் தப்பட வேண்டும்.

தேசிய கல்வி ஆணைக் குழு ஆசிரிய கல்வி தொடர்பில் மேற் கொண்ட ஆய்வொன்றில் பேராசிரியர் எலிசி. கொத்தலாவல முன்வைத்த பரிந்துரைகளில் முதலாவது பரிந்துரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை தனித்த ஒரு பீடமாக தரமுயர்த்தப்படவேண்டும் என்பது யாழ்ப்பாணத்தில் ஒரு கல்விப் பீடம் அமைவதற்கான வாய்ப்பை நியாயப்படுத்துவதற்கான சான்றாகவிருப்பது சாதகமான அம்சமாகும்.

5. தாம் சார்ந்த பாடப்பரப்புக்களில் முதுமாணிக் கற்கைகளை நிறைவு செய்யும் கல்வி நிர்வாக சேவை விசேட ஆளணியினர் மற்றும் ஆசிரிய கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தோரை ஊக்குவிக்கத்தக்க பொறிமுறைகள் மேம்படுத்தப்படவேண்டும்.

6. ஆசிரிய சேவையில் கல்வி முதுமாணிக்கற்கைக்கு அளிக்கப்படும் முன்னுரிமைக்குச் சமனான முன்னுரிமை துறைசார் பாடப்பரப்புகளின் முதுமாணிக் கற்கைக்கும் அளிக்கப்



04

படவேண்டும். அதனை உறுதிசெய்ய துறைசார் முதுமாணிக் கற்கைகளில் கல்வியியல் சார் சில முக்கிய அலகுகளை இணைத்துக்கொள்ள முடியும்.

ஆசிரிய கல்விக்காக பிராந்திய மட்டத்தில் செய்யப்பட வேண்டிய சிறப்பு ஏற்பாடுகள்

1. ஆசிரிய கல்வி கற்கைநெறிகளுக்கான அனுமதிகளின் போது பதவி நிலை அந்தஸ்து, சேவைக்காலம் என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அனுமதி வழங்குவதை விடுத்து தொழில்சார் முன்னேற்றத்துக்கு ஆசிரிய கல்வியின் அவசியம் குறித்த சிந்தனைகளில் முன்னுரிமையும் அனுமதியும் வழங்கப்படவேண்டும்.

2. மேற்குறித்த நிலைமைகளின் படி க்ல்வி முதுமாணிக் கற்கைகளில் பாடசாலை ஆசிரியர்களுக்கு குறிப்பாக இளம் ஆசிரியர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்குவது அவசியம்.

இது ஆசிரியர்களின் தொழில் வாண்மையை விருத்தி செய்வதுடன் கல்விப் புலங்களின் மேல் நிலைப் பதவிகளுக்கு இளைய வயதில் நமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வர வழி செய்வதுடன் வடக்கு கல்விப் புலத்தையும் மேன்மையுறச் செய்யும்.

3. அதிபர் சேவை பதவியுயர்வுக்கு தேவையான கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அல்லது திறந்த பல்கலைக்கழக மற்றும் தேசிய கல்வி நிறுவக பிராந்திய நிலையங்களில் விரைந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

4. ஆசிரிய கல்வி தொடர்பில் துறைசார்ந்தோரிடம் உள்ள மாயவிம்ப எண்ணங்கள் அகற்றப்பட்டு புதிய சிந்தனைகள் உருவாகத்தக்க வகையில் மனப்பாங்கு ரீதியிலான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

5. துறைசார் பாடப்பரப்புக்களில் முதுமாணிக் கற்கைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குறிப்பாக விஞ்ஞானத்துறையில் ஆரம்பிக்கப்பட்டு அவற்றை தொடர்வதற்கான ஊக்கப்படுத்தல்கள் வழங்கப்படவேண்டும்.

முடிவுரை

ஆசிரிய கல்வியின் தரமும் அது வழங்கப்படும் முறைமையின் தரமும் கல்வியின் தரத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளாகும். நாட்டின் தேசிய மனித வள உற்பத்தியில் கல்வித் துறை கணிசமான பங்களிப்பை ஆற்றுகின்றது. அங்கு செய்யப்படும் வினைத்திறனான மனிதவள மேம்பாட்டுத் திட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டின் வினைத்திறன் மற்றும் விளைதிறனையும் அதிகரிக்கும். அது பயனுறுதித்தன்மை மிக்க வகையிலும் நீடித்து நிலைத்து நிற்கத்தக்க வகையிலும் கல்வி சார் நோக்கங்களை எய்தத்தக்க வழிகளைத் திறக்கும். ஔவையாரின் வரப்புயர வழியில் சொல்வதனால்,


"ஆசிரியர்கள் தரமுயர மாணவர் தரமுயரும்
மாணவர் தரமுயர கல்வித் தரமுயரும்
கல்வித் தரமுயர சமூகத் தரமுயரும்
சமூகத் தரமுயர தேசத் தரமுயரும்"

எனவே ஆசிரியர்களை வலுப்படுத்துவோம் எனும் சிந்தனையை அடியொற்றி ஆசிரியத்துவத்துடன் தொடர்புடைய அத்தனை தரப்புக்களினதும் தரத்தையும் மேம்பாடடையச் செய்யும் விதத்தில் ஆசிரிய கல்வி குறித்த சிந்தனைகளை மாற்றிக்கொள்வது காலத்தேவை கருதிய பணியாகும்.

உலகளாவிய ரீதியில் சிந்திப்போம் உள்ளூர் அளவில் செயலாற்றுவோம்.

முற்றும்.

## தச்சுப்பட்டறையில் தீ!



(கண்டி)

கண்டி-பல்லேகல-கிங்கள்ள பகுதியில் உள்ள ஒரு சிறிய தச்சுப் பட்டறையில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தச்சுப் பட்டறையின் பின்புறத்தில் குப்பைகளை எரிப்பதற்காக அதில் தீ வைத்த போது தீ தச்சுப் பட்டறையின் உள்ளும் பரவியது.

தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் இணைந்து தீயை அணைத்துள்ளனர். (7)

## பொலிஸாரின் விசேடசோதனை இதுவரை 2037 சாரதிகள் கைது

(கொழும்பு)

வீதி விபத்துகளை கட்டுப்படுத்துவதற்காக கடந்த 5 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட்டிருக்கும் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய, ஆறாவது தினமான நேற்று முற்பகல் வரை 2037 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முற்பகல் முதல் நேற்று முற்பகல் வரை 247 சாரதிகள் மது போதையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதேவேளை இந்த செயற்றிட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி வரை மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரலும் விருதுக்கான சிபார்சுகள் பெற்றுக்கொள்ளலும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் (சங்காணை) பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் பணுவில் இதழினை 2015 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் அதன் ஐந்தாவது மலரினை ''பணுவில் இதழ்-5'' எனும் பெயரில் வெளியிட உள்ளோம்.

பல்சுவை ஆண்டிதழாக வெளிவரும் இம்மலருக்காக பிரதேசம் சார் தொல்லியல், வரலாறு, ஆன்மீகம், சமூகவியல், மானிடவியல், கலைமரபுகள், வாழ்வியல், மரபுரிமைகள், வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் சார்ந்த ஆவணப்படுத்தல்கள் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக் கட்டுரைகளாகவும் கட்டுரைகளாகவும் பத்தி எழுத்துக்களாகவும் புனைகதைகளாகவும் கவிதைகளாகவும் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள் யாவும் எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, வலி.மேற்கு, சங் காணை" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி பொ.பிரேமினி அறிவித்துள்ளார்.

மேலும் இவ் ஆண்டிற்கான பிரதேச கலாசார விழாவில் பிரதேச மட்ட விருதான ''கலை வாரிதி" விருது கௌரவித்து வழங்குவதற்கு ஏதுவாக பிரதேச விழாவில் பிரதேச கலைஞர்கள் பற்றிய சிபார்சு பிரேரணைகளை வழங்க விரும்புவோர் மேற்குறித்த திகதிக்கு முன்னர் கலைஞர் பற்றிய தகவல்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு அறியத் தந்துள்ளார். (7)

## ஹெரோயினுடன் பாகிஸ்தான் பிரஜை கைது

(கொள்ளுப்பிட்டி)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தின் ஹோட்டல் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் போதைவஸ்து தடுப்புப் பிரிவு மற்றும் விஷேட அதிரடிப் படையினர் ஒன்றிணைந்துமேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது 2 கிலோ கிராம் மற்றும் 85 கிராம் ஹெரோயினுடன் 48 வயதுடைய பாகிஸ்தானிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சந்தேக நபர் 07.07. 2019 ஆம் திகதியன்று பாகிஸ்தானில் இருந்து இலங்கை வந்துள்ளதுடன் மேலும் அவர் தென்னாபிரிக்கா நோக்கி புறப்பட்டுச் செல்ல ஆயத்த நிலையில் இருந்துள்ளமையும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (7)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் எவ்வித முயற்சியையும் ஜனாதிபதி முன்னெடுக்கவில்லை

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் எவ்வித முயற்சிகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கவில்லை.




சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினரே மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணையும் திட்டங்களை வகுத்து வருகின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் இவ்வருட இறுதியில் நடத்த வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை எக்காரணிகளுக்காகவும் பிற்போட இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# அரசியல் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்கு தேரர்களுடன் நேருக்குநேர் சந்திப்புகள் அவசியம்

## ஓமல்பே தேரர் வேண்டுகோள்



(கொழும்பு)

இந்த நாட்டில் உள்ள அரசியல் தலைவர்கள், பௌத்த தேரர்களுடன் நேருக்கு நேர் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும் என தென் மாகாண சங்க சம்மேளனத்தின் போசகர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அரச நிர்வாகம் ஒன்றுக்கான மாறாத கொள்கையொன்றை தயாரிக்கும் தேசிய புத்திஜீவிகள் பிக்கு அமைப்பினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஐந்தாவது மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் ஓலைக்குடிசை வீடுகள் இல்லையெனவும், சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளே ஓலைக்குடிசையாக காணப்படுவதாகவும் கூறியிருந்தார்.

இப்படியான கருத்துக்களைக் கூறும் இந்தத் தலைவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதை முதலில் யோசிக்க வேண்டும். இவ்வாறானவர்களை ஓர் இடத்துக்குக் கூட்டி நேருக்கு நேர் இதுபோன்ற சம்பவங்களை பிக்குகள் தெளிவுபடுத்த வேண்டும்.

குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஹலால் விடயங்களுக்காக நாட்டிலுள்ள முழுச் சமூகத்திடமிருந்தும் கப்பம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதனையெல்லாம் அறியாத இந்த நாட்டுத் தலைவர்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என மேலும் தெரிவித்தார். (7)

# களுத்துறையில் கைக்குண்டு மீட்பு

(களுத்துறை)

களுத்துறை வடக்கு தேதியாவலப் பகுதியில் உள்ள கால்வாய் கரை ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

தேதியாவலப் பகுதியில் உள்ள கால்வாய் கரையில் கைக்குண்டு காணப்படுவதாக பிரதேசவாசிகளால் வழங்கப்பட்ட தகவலை அடுத்தே கைக்குண்டு பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கால்வாயை சுத்திகரிக்கும் பொழுது அகற்றப்பட்ட களிமண் குவியலில் இருந்து மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் விசேட படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1774

### நிரோஷினி

அதிக அன்பு ஒருநாள் நம்மை அநாதையாக்கும்




### ராகவ்

டேய் இந்த உலகத்தில நீங்க மட்டும்தான் லவ் பண்றீங்களா? அது என்ன எப்பபாரு பொண்டாட்டி பொண்டாட்டின்னு எங்க உசுர வாங்கிறீங்க... இரு உங்கம்மா கிட்டயே சொல்றன்



### அனிருத்

உலகத்தில நல்லவன் கெட்டவன் யாரும் இல்லை மாட்டிக்கிட்டா கெட்டவன் இல்லைனா நல்லவன்



### மேகலா

எவ்வளவு நம்பிக்கை வைத்தாலும் துரோகம் முளைக்காத இடங்கள் இரண்டுதான். ஒன்று தாயின்மடி, இரண்டு இறைவன் மடி



### ஈசன்

நாம் பிறருக்கு செய்வது மற்றொருவர் மூலமாக நமக்கு வந்து சேரும் அது உதவியாக இருந்தாலும் சரி, துரோகமாக இருந்தாலும் சரி



### மாதவன்


அறியாத வயதில் தெரிந்தது பணத்திற்கும் சந்தோசத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய மாணிக்கவாசகர் குருபூசை தேனினைச் சொரிந்தது"







இலங்கையின் கலை வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் ஒரு மன்றமாக காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் மிளிர்கிறது.

இயல், இசை, நாடகம், பரதம், ஆய்வு ஆன்மீகம், பண்ணிசை, பண்பாடு, பரோபகாரம் மற்றும் லலிதக்கலைகள் என பன்முகவளர்ச்சியில் மேற்படி மன்றம் தன்னை ஒப்படைத்துள்ளது. எந்தவொரு மன்றமும் வெற்றி பெறவேண்டுமானால் கடமைக்கு என்று ஈடுபடாமல் காத்திரமாக ஈடுபட்டால் வெற்றி காலடியில் சரணடைந்து வெளுத்து வாங்கும். கிழவன்காடு கலா மன்றம் எந்தவொரு விடயத்திலும் மனதார மனம் வைத்து கனம் செய்வதனால் எண்ணியது பலிக்கின்றது.

திருவாசகத்தையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு சித்தத்தை சிவன்பால் வைத்து எல்லாம்வல்ல எம்பெருமானை சிக்கெனப்பிடித்து சிவகதியடைந்த காரைநகர் ஒளிவிளக்கான கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்கள் அரங்கத்திலே மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறுவது மிகவும் பொருத்தமானதே.

அந்தவகையிலே காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் மாணிக்கவாசகர் குருபூசை விழா கடந்த 6 ஆம் திகதி சனிக்ழமை கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் பிற்பகல் 2 மணி க்கு ஆரம்பமாகி நடைபெற்றது. அடிமுடி தேடியது, அயனின் தலை அரிந் தது, அலைகடலில் வலை வீசியது, ஆலா லம் உண்டது, ஆலின் கீழ் அறம் உரைத் தது, இந்திரன் குயில் உருவம் கொண்டது, இராவணன் மலையை எரித்ததும் நெரிபட்டதும், கங்கையைத் தாங்கியது, கருங்குருவிக்கு அருளியது, காமனை எரித்தது, காலனை உதைத்தது,தக்கன் வேள்வி, நரிகளைப் பரிகளாக்கியது,பிட்டுக்கு மண் சுமந்தமை பன்றிக்குட்டிக்குப்பால்கொடுத்தமை,பிறையை தலையில் சூடியமை, முப்புரம் எரித்த செய்தி எல்லாம் கிழவன்காட்டில் உணர்வாகி உரமாகியது.

ஈழத்துச் சிதம்பரம் என்ற சிவாலயத்தின் ஆன்மீக அதிர்வலைகள் அன்றைய தினம் காரைநகரெங்கும் பிரவாகித்தது என்று சொல்வது சாலவும் பொருத்தமானது.

கலாமன்ற மாணவர்களும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் சேர்ந்து விழாவினைச் சிறப்பித்தனர். திருவாசகம் ஓதல், பேச்சு, சிந்தனைக்கு ஒரு விருந்து, நடனம் மற்றும் நாட்டியார்ப்பணம் ஆகிய நிகழ்ச்சிகள் மிகவும் பயபக்தி நிறைந்தனவாய் மண்டபத்தை ஆன்மீகச் செழிப்புக்குள் நிறைத்தன. நடன நிகழ்வுகள் ரொம்பப் பிரம்மாதம்.

தில்லை அம்பலநடராஜப் பெருமான் காரைநகரில் தரிசனமாகி அருள்பாலித்த அதிசயம் பார்த்து சபையோர் மெய்மறந்தனர். உடை, நடை, பாவனை, நட்டுவாங்கம், மேடை அமைப்பு, பின்னணியாவும் அற்புதம்.

**சொற்பொழிவு**

வான்கலந்த வாசம், ஊன் நிறைந்து பேசும்படி தேன் சுமந்தவாறு தந்து மேன்மை கொண்ட பான்மையினால் செந்தமிழ்ச் சொல்லருவி எஸ்.லலீசன் ஐம்பொறி வாயிலாக சிற்றின்பம், பேரின்பம் ஆகிய இரண்டு பேறுகளையும் உணரும் படியாக உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டும்படி உள்ளத்தைக் கோயிலாக்கினார்.

அவருடைய தமிழ்ப்பணி, சொல்லாற்றல், மொழி நடை, அணி நடை, பொருளாட்சி, விடயதானம் யாவும் தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் வாய்த்த கொடைகளாகும். சமூகம் அவரை நன்கு பயன்படுத்த வேண்டும். ஜீரணிக்கக்கூடிய சொற்பொழிவாக லலீசன் பேறாகின்றார். சிவத்தமிழ் தேனாகப் பாய்கிறது அவரது நாவில்.

**தேனிசை**

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய் தேனினைத் தித்திக்க தித்திக்கப் பாடிய பண்ணிசைக் கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களேயாவர். பாடிய ஐவரும் பண்ணிசை வாணர்களாவார்கள். பிரம்மாதம்.

கூடிக்கூடி உன் அடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழி அற்றே
வற்றல் மரம் போல் நிற்பேனோ?
ஊடி ஊடி உடையாயொடு
கலந்து உள்ளுருகி பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே!

பிரார்த்தனையாக அமைந்த மேற்படி பாடலானது திருப்படையாட்சிக்கும் அச்சோப் பதிக மாட்சிக்கும் அழைத்துச் சென்று பேரானந்தமளித்தது. சபாஷ்! நிறைவாக, விவாத அரங்கு, தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் உச்சம் தொடவைத்தது. தற்போது தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் சமூக நோக்கிலிருந்து விலகிவிட்டனவா? விலகி விடவில்லையா? இரண்டு அணியினரும் சூடு பிடிக்குமாறு பேசினார்கள். விலகிக் கொண்டு சென்றாலும் விலகாதவாறு நாம் ஒவ்வொருவரும் பண்பாட்டு நிகழ்வுகளை பேணவும் வேண்டும். பேறாக்கவும் வேண்டும். விலகிவிட்டன போல் தோன்றினாலும் மக்கள் விலகாத நாட்டம் கொண்டவர்களாக வரம் பெற்றுள்ளார்கள். மாணிக்கவாசகர் குருபூஜை விலகவில்லை என்பதையே எடுத்தியம்புகின்றது. விவாத அரங்கு அற்புதம்.

"விலகிவிட்டன" என்ற அணியில் ஐங்கரன், சிவாம்சன், சிவஸ்கந்தஸ்ரீ ஆகிய மூவரும் நியாய எடுத்துக்காட்டுக்களுடன் கருத்துக்களைக் கைப்பற்றி தேவையறிந்து பொழிந்து தள்ளினார். "விலகவில்லை" என்ற அணியில் சர்வேஸ்வரா, நிசாந்தன், சஜீவன் ஆகிய மூவரும் பதிலுக்குப் பதில் சுடச் சுட நியாய ஆதிக்க வரம்புகளை மீறாமல் பேஷாகத் தர்க்கித்தனர்.

தமிழருவியின் சமயோசிதமான வாதங்களும், கச்சிதமான நியாயங்களும் தெட்டத் தெளிவான தீர்ப்புக்களும், சபையோரை விழிப்படைய வைத்தன.

பண்பாடுகளும் பாரம்பரிய செயற்பாடுகளும் காரைநகரில் பேணப்படுவதாலேயே கலாநிதி. வைத்தீஸ்வரக் குருக்கள் அரங்கு இன்று எல்லோருக்கும் வரமும், வாழ்வும் தருகிறது.

அந்த வகையில் "கலை வளம் பெருக்கி நிலையான இன்பம் பெறுவோம்" என்ற கிழவன்காடு கலாமன்றத்தின் மகுட வாக்கியம் நீடு வாழ்வதாக. அவர்கள் பணி நிச்சயம் வெல்லும்.

**கே.எஸ்.சிவஞானராஜா**

# பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து பிரதமர் மீது குற்றம்சாட்டுவதை ஏற்க முடியாது

## லக்ஸ்மன் கிரியெல்ல காட்டம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது குற்றங்களைக்கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்று சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இனியும் இந்த விடயத்தை முன்னிறுத்தி எவரும் இனவாதம் மேற்கொள்ளக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "ஏப்ரல் 21 ஆம் திகதிக்குப் பின்னர்தான் ஐ.எஸ். தீவிரவாதிகள் குறித்த தகவல்கள் நாட்டில் வெளிவந்தன. புலனாய்வு அதிகாரிகள் குண்டுத்தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கை விடுத்ததாக கூறப்பட்டது.

ஆனால், குற்றப்புலனாய்வு அதிகாரிகள் இதுகுறித்து திகதி ஏதும் கூறாமலே எச்சரிக்கை விடுத்ததாக உயர்நீதிமன்ற நீதியரசர், வழக்கு விசாரணையின் போது தெரிவித்தார். அத்தோடு, இதுகுறித்து பிரதமர் மற்றும் அமைச்சரவை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால், ஏன் பாதுகாப்பு அமைச்சரை யாரும் குறை கூறவில்லை என்று கேட்க விரும்புகிறேன். பிரதமர் மட்டும்தானா இதில் குற்றவாளி? பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியும் இதற்கு பதில் கூறத்தானே வேண்டும்.

இந்த நிலையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பிரதமருக்கும் எதிராக கொண்டுவரப்பட்ட ஒன்றாகவே நாம் கருதுகிறோம்.

அத்தோடு, குண்டுத்தாக்குதல் குறித்து விசாரணை செய்ய ஸ்தாபிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதியையோ அல்லது பிரதமரையோ அழைத்தால் அவர்கள் சென்றே ஆகவேண்டும்.

இந்தத் தெரிவுக்குழு ஊடாகத்தான் தற்போது பல்வேறு விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனவே, இதற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்பதையும் இவ் வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்று 24 மணிநேரங்களுக்குள், அரசாங்கம் எனும் ரீதியில் நாம் துரிதமாக செயற்பட்டு தீவிரவாதத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் செயற்பாடும் 99 வீதம் நிறைவடைந்து விட்டன.


எனவே, இனியும் இந்த விடயத்தை வைத்து இனவாதத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்" என மேலும் தெரிவித்தார். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 120 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 110 | 120 |
| கோவா | 80 | 800 | 60 | 80 |
| கரட் | 140 | 160 | 120 | 200 |
| பூசணி | 100 | 140 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 100 | 110 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 180 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 60 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 140 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 160 | 140 | 120 |
| போஞ்சி | 160 | 120 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 110 | 150 |
| வெங்காயப்பூ | 240 | 180 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 110 | 50 |




# நாவடக்கம் இல்லாத அரசன்



சேர நாட்டின் மேற்குக் கரையோரமுள்ள நெய்தல் நாட்டின் மன்னன் மூவன். அந்நெய்தலின் உட்பகுதி நல்ல வளமான வயல்களை உடைய செழிப்பு மிக்க நாடு. இந்த அரசன் திறமையானவன், நற்குணங்கள் பல உடையவன். ஆனால், நார்வடக்கம் இல்லாதவன். யாரையும் எடுத்தெறிந்து பேசிவிடுவான். தான் பேசிய பேச்சிற்கு வருத்தமும் தெரிவிக்கமாட்டான். அமைச்சர்களும் கூட இவனிடம் தங்கள் கருத்துக்களைச் சொல்ல அஞ்சினர்.

ஒரு சமயம் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் மூவனைப் பாடிப் பரிசு பெற்றுச் செல்ல வந்தார். இப்புலவர் குமணவள்ளலைப் பாடிப் பரிசுகள் பல பெற்றவர். அப்பரிசுகளை எல்லாம் ஏழைகளுக்கு கொடுத்ததால் மறுபடியும் ஏழ்மை நிலையை அடைந்தார். புலவர் பல நாட்கள் காத்துக்கிடந்த பின் ஒருநாள் மூவனை அரசவையில் சந்தித்து பாடல் ஒன்றைப் பாடினார்.

"அரசே, நான் ஒரு புலவன். என் பெயர் பெருந்தலைச் சாத்தனார்."

"உமது பெயருக்கும் உருவத்திற்கும் சிறிதும் பொருத்தம் இல்லையே!"

"ஏன் மன்னா அப்படிக் கூறுகிறீர்கள்?"

"பெருந்தலைச் சாத்தனார் என்கிறீர்கள். உமது தலை பெரியதாக இல்லையே... சிறியதாகத் தானே இருக்கிறது."

"மன்னிக்க வேண்டும் மன்னா. பெருந்தலை என்பது எனது ஊரின் பெயர்!"

"ஓ, அப்படியா செய்தி!"

"நான் குமணவள்ளலைப் பாடிப் பல பரிசுகள் பெற்றவன்!"

"இப்போதும் அவனிடமே செல்ல வேண்டியது தானே. உன் போன்ற புலவர்களுக்குக் கொடுத்துக் கொடுத்து அவன் போண்டியாகி இருப்பான்!"

"அரசே, பழம் பழுத்த மரங்களை நாடித்தானே பறவைகள் செல்லும். அதைப் போல மன்னர்களையும், வள்ளல்களையும் நாடி பாவலர்களாகிய நாங்கள் வருகிறோம்."

"நீங்கள் பொய்யாக எதையும் புனைந்து பாடுவீர்கள். இல்லாததை இருப்பதாகக் கூறுவீர்கள். அதைக் கேட்டு சிலர் மகிழ்ந்துபோய் உங்களுக்குப் பரிசு கொடுக்கிறார்கள். அவர்கள் தற்புகழ்ச்சியை விரும்புபவர்கள். நீங்கள் பொய் சொல்லியே பிழைக்கும் ஒரு வஞ்சகக் கூட்டம்... யாரங்கே, இந்தப் புலவரை வெளியே அனுப்பு."

"இல்லை, நானே சென்றுவிடுகிறேன்."

புலவர் அவமானத்தால் முகம் சோர்ந்து சென்றதைக் கண்ட மூவன் சிரிசிரி என்று சிரித்தான். மூவன், சேரன் கணைக்கால் இரும்பொறைக்குக் கட்டுப்பட்ட ஒரு குறுநில மன்னன். மூன்று ஆண்டுகளாகவே மூவன் கப்பம் கட்டாததை அறிந்தான் இரும்பொறை.

"என்ன சொல்கிறான் மூவன் என்று அறிந்துவா!" எனத்தூதுவனை அனுப்பினான். மூவன் அவைக்கு வந்த தூதுவன், மூவனை மரபுப்படி வணங்கி, "மன்னன் கணைக்கால் இரும்பொறையின் தூதுவன் நான்," என்றான்.

"கணைக்காலனுக்குக் கருவூலத்தில் பணத்தட்டுப்பாடு வந்ததும் என் நினைவு வந்துவிட்டதாக்கும்... இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது?"

"மன்னா, நான் உங்களிடம் யாசகம் ஒன்றும் கேட்க வரவில்லை. எங்கள் மன்னருக்கு மூன்று ஆண்டுகளாக நீங்கள் கட்ட வேண்டிய திறையைச் செலுத்தவில்லை."

"தூதுவனே! நன்றாகக் கேட்டுக் கொள். எனது நெய்தல் நாடு இன்றிலிருந்து சுதந்திர பூமி. நாங்கள் இனி யாருக்கும் கப்பம் கட்ட மாட்டோம்."

"எமது அரசரின் பெருமையையும், வலிமையையும் தெரிந்தே நீங்கள் இப்படிப் பேசுவது மிகவும் வருந்தத்தக்கது."

"உனது கணைக்காலனுக்கு நான்தான் காலன். என்னைப் போர்க்களத்தில் வந்து சந்திக்கும்படி கூறு."

"உங்களால் எம் மன்னனை வெல்ல முடியும் என்று நீவிர் நினைப்பது உங்கள் இறுமாப்பு. எமது மன்னனின் வலிமை தெரியாமல் பேசுவது மிகவும் இரங்கத்தக்கது."

"அடே தூதுவனே... இங்கே நிற்காதே, ஓடிவிடு. இல்லையெனில் உன் முன்பற்களைத் தட்டிவிடுவேன். எச்சரிக்கை!"

தூதுவன் கணைக்கால் இரும்பொறையிடம் வந்து நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறினான். "தூதுவன் ஒருவனின் பற்களைத் தட்டுவேன் என்று நாவடக்கம் இல்லாமல் சொன்ன அந்த மூவனைப் போர்க்களத்தில் சந்தித்தே தீருவேன்," என்று முடிவு கட்டினான் இரும்பொறை.

"மன்னா, சிறு நரியை எதிர்க்கச் சிங்கம் செல்வதா? வேண்டாம். இது உங்கள் வீரத்திற்கு இழுக்கு. நாவடக்கமின்றிப் பேசிய அந்த மூவனை வென்று அவன் முன்பற்களை உங்களிடம் கொண்டு வந்து காணிக்கையாக்குகிறேன்." தளபதி வீரமுழக்கமிட்டான்.

"அதுவும் சரிதான். மூவன் இனி வாயைத் திறக்கும் போதெல்லாம் நாவடக்கம் வேண்டும் என்பதை உணர வேண்டும்.

அவன் முன்பற்களைக் கொண்டு வருவது தான் நன்று!"

"சரி மன்னா, அப்படியே செய்கிறேன்."

"தளபதியாரே, மூவனின் முன்பற்களைப் பிடுங்கி நம் தொண்டிக் கோட்டையின் வாயிற் கதவுகளில் பொருத்தி,

"யாகாவாராயினும் நாகாக்க. நாவைக் காக்காத மூவனின் பற்களைப் பாரீர்!' என்று அதன் கீழ் எழுதி வையுங்கள்."

"உத்தரவு மன்னா!"

கணைக்கால் இரும்பொறையின் படைவீரர்கள் அவனை விரட்டிப் பிடித்து தளபதியிடம் கொண்டு வந்தனர்.

நாவடக்கமின்றிப் பேசிய மூவனின் முன் பற்கள் தட்டப்பட்டன. மன்னன் கூறியவாறே அவை தொண்டிக் கோட்டையின் வாயிற் கதவில் பதிக்கப்பட்டன.

சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் மூவன் தன் செயலுக்காக வருந்தினான். தன் நாவடக்கமற்ற செயலால் தனக்கும் தன் நாட்டுக்கும் தீராத அவமானம் தேடியதை நினைத்து நினைத்து சேரநாட்டுச் சிறையிலிருந்தே உயிர்விட்டான். குழந்தைகளே! வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி பிறருடைய மனதைப் புண்படுத்தாமல் இருக்க. மூவனுக்கு ஏற்பட்ட நிலை ஒரு நல்ல பாடம்.

## விடுகதைகளும் விடைகளும்

- ஆனந்தத்திற்கும் துக்கத்திற்கும் மட்டுமே தண்ணீர் பொங்கும் குளம். அது என்ன குளம்?

**கண்கள்-கண்ணீர்**

- காலையும் மாலையும் உயர்ந்தவன், மதிய வேளையில் குட்டையாவான், இரவில் எங்கேதான் போவானோ. அவன் யார்?

**நமது நிழல்**

- மூனு கண்ணுப் பானையிலே ஒரு மடக்குத் தண்ணீர். அது என்ன?

**தேங்காய்த் தண்ணீர்**

- கடலில் தோன்றி, கடலில் மறையும். அது என்ன?

**அலைகள்**

- ஆளில்லாத வீட்டில் அவன் குடியேறுவான். அவன் யார்?

**சிலந்திகள்**

## பொது அறிவுகள்

- நாய்களே இல்லாத ஊர் எது?

**சிங்கப்பூர்**

- மனிதர்களைக் கண்டு பயப்படும் வியாதிக்குப் பெயர் என்ன?

**ஆன் ட் ரோ- போபியா**

- எந்தத் தட்பவெப்பத்திலும் உறையாத தனிமம் எது?

**ஹீலியம்**

- உலகிலேயே அதிக தித்திப்பான பொருள் எது?

**தாலின். இது கெடெம்பே என்ற செடியில் இருந்து கிடைக்கிறது**

- வைரத்தில் மொத்தம் எத்தனை மூலைகள் உள்ளன?

**ஆறு மூலைகள்**

என்னை யார் தோற்கடித்தது என்று கோபத்துடன் பார்த்தேன். வேறு யாரும் இல்லை. கோபம்தான் என்னை தோற்கடித்தது.- ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மின்சாரம் தடைப்படுகிறது பரீட்சை வரப்போகிறது போலும்

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

சில சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னதாக சில அறிகுறிகள் தெரியும் என்ற பொருளை இப்பழமொழி நமக்கு உணர்த்தி நிற்கிறது.

மேகம் கறுப்பதும் மின்னல் முழக்கமும் மழை வருவதற்கான அறிகுறி என்பதுபோல கொள்ளலாம். இது இயற்கைக்குரியது.

செயற்கை வழி முன்னறிகுறிகளும் உண்டு. ஐஸ்பழ விற்பனை வாகனம் வருவதை உணர்த்தும் ஒலிபெருக்கிப் பாடல். நோயாளர் காவு வண்டி வருவதை உணர்த்தும் ஒலி என்பன செயற்கையான முன்னறிகுறி ஏற்பாடுகள்.

இப்படியான ஏற்பாடுகள் ஒன்றைப் பற்றியே இங்கு கூறப்போகின்றோம். அதற்கு முன்னதாக, LKG (எல்.கே.ஜி) என்ற திரைப்படம் அரசியல்வாதிகளின் திருகுதாளத்தை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்ற படம்.

மிக எளிமையாகத் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் தமிழகத்தின் மூத்த அரசியல்வாதி நாஞ்சில் சம்பத் நடிக்கின்றார்.

பின்தங்கிய அரசியல்வாதியாக நடிக்கின்ற அவர் உறங்கும்போதுகூட, அரசியல் நினைப்பும் எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தின் தாக்கமும் தூக்கத்தில் அவரைப் பேச வைக்கிறது.

அவரருகில் சிறு பையனான அவரது மகன் உறங்குகிறான். தந்தையின் தூக்கக் குழப்பத்திலும் அரசியல் புலம்பலிலும் அவன் பயந்து போகிறான்.

நாம் கூறுகின்ற LKG படத்தைப் பார்த்தவர்கள் நாம் கூறிய கதைப்பகுதியை நினைவுக்குக் கொண்டு வாருங்கள்.

தந்தை ஒருவர் உறங்குகிறார். அவருக்கு அருகில் அவரது மகன். நடுநிசி நேரம் மின்சாரம் தடைப்படுகிறது. காற்றாடிகள் சுற்றவில்லை. இயற்கைக் காற்றும் குறைந்து விட்டது. நுளம்புத் தொல்லை. இவற்றின் தொந்தரவால் விழித்துக் கொண்ட அந்தச் சிறுவன் அப்பா... அப்பா... கரண்ட் கட்டாகிவிட்டது என்று சொல்லுகிறான்.

தந்தை நித்திரைச் சோம்பலில் கரண்ட் கட்டா! அப்ப பரீட்சை வரப்போகிறது. நீ பேசாமல் உறங்கு என்று கூறிவிட்டு நித்திரையாகி விட்டார்.

மறுநாள் அந்தப் பையன் பாடசாலைக்குச் செல்கிறான். ஏதோ சொல்லி வைத்தது போல தமிழ் ஆசிரியர் யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்று கூறி பழமொழி என்ற பகுதியைக் கற்பிக்கிறார்.

தனது கற்பித்தலை இடைநிறுத்தி, மாணவர்களே! இந்தப் பழமொழியை உணர்த்தும் உதாரணங்கள் சில கூறுங்கள் என்கிறார்.

அதோ! அந்த மாணவன்; பரீட்சை வரும் பின்னே மின்சாரம் தடைப்படும் முன்னே என்றான்.

ஆசிரியர் நல்ல பதில் என்று பாராட்டினார். ஏனைய மாணவர்கள் சேர் விளங்கவில்லை என்றனர்.

மாணவர்களே! க.பொ.த.உயர்தரப் பரீட்சையும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையும் இன்னும் இருபது நாட்களுக்குள் வரப்போகிறது.

அவ்வாறு பரீட்சைகள் வரும்போது மின் தடையை ஏற்படுத்தி, மாணவர்களின் பெறுபேற்றில் வீழ்ச்சியைச் செய்கின்ற சதிவேலை கடந்த சில வருடங்களாக வடக்கில் நடக்கிறது.

இப்போதும் மின்சாரம் தடைப்படுகிறது. பரீட்சை வரப்போகிறதல்லவா அதுதான்.•

# துன்னாலை இளைஞன் கொலை; இழப்பீடு கோரி தாயார் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மணற்காடு பகுதியில் இளைஞர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பில் அவரது தாயாரால் 50 இலட்சம் ரூபா இழப்பீடு கோரி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி பருத்தித்துறை மணற்காடு பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலை கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யோகராசா தினேஷ் ( வயது-25) என்பவர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்ஜீவ் மற்றும் பொலிஸ கானஸ்டபிள் அபுதாலிப் மொகமட் முபாரக் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கொல்லப்பட்ட யோகராசா தினேஷின் தாயாரான யோகராசா செல்வம், தனது மகனின் சாவுக்குக் காரணமானவர்கள் என பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் குறிப்பிட்டு அவர்களிடமிருந்து 50 இலட்சம் ரூபா இழப்பீடாகப் பெற்றுத் தருமாறு கோரி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

"யோகராசா தினேஷ்மீதான துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு எந்தவொரு சட்டரீதியான காரணமும் இல்லாமல் கண்மூடித்தனமாகவும் சட்ட விரோதமாகவும் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போது கொல்லப்பட்ட இளைஞனுக்கும் பாரவூர்தியில் பயணித்த ஏனையோருக்கும் உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய காயத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்தும் அதுபற்றி எந்தவொரு அக்கறையோ, கவனமோ இல்லாமல் வேண்டுமென்றும் விசமத்தனமாகவும் அது மேற்கொள்ளப்பட்டது. அதனால் எனது மகனின் உயிரிழப்புக்கு முதலாவது பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் பொறுப்பானவர்களாவர்" என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

"யோகராசா தினேஷ், உயிரிழப்பு நிகழ்வதற்கு சில மாதங்களுக்கு முன்புதான் வெளிநாடு ஒன்றில் பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பியிருந்தார். அதன்பின் ஒரு தொழிலாளியாக தனது உடல் உழைப்பால் தாயாரின் வாழ்வாதாரத்துக்கு பொறுப்பாளியாகவிருந்தார்.

பல வருடங்களுக்கு முன் கணவரையிழந்த மனுதாரர், கொல்லப்பட்ட தினேஷின் உழைப்பிலேயே தங்கியிருந்தார்.

மகன் கொல்லப்பட்ட பின்னர் மன உளைச்சலுக்கும் மனத் துயருக்கும் உள்ளாகியுள்ள மனுதாரர் வாழ்வாதாரத்துக்கு வழியின்றி அநாதையாக்கப்பட்டுள்ளார்.

அதனால் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளும் மனுதாரருக்கு 50 இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. (5-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரம், இறம்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், ஈரப் பெரியகுளம், கற்குண்டமடு, அளுத்கம, பூ ஓயா, பஹல அளுத்வத்த, கண்டி வீதி, தவசிக்குளம், குட்செட் வீதி, பண்டாரிக்குளம், நெடுங்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வெளிக்குளத்திலிருந்து துட்டுவாகை வரை, கருவேலப் புளியங்குளம், மலையா பருத்திக்குளம், மடுகந்த, அட்டம்பஸ்கட, மாமடுவிலிருந்து பொகஸ்வேவா வரை, பறயனாலங்குளத்திலிருந்து முகத்தான்குளம்வரை, நெளுக்குளத்திலிருந்து பறயனாலங்குளம் வரை, பூவரசங் குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, புளிதறித்தபுளியங்குளத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரை, பிரமனாளங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, பூந்தோட்டம், வைரவப் புளியங்குளம, பட்டானிச்சூர், குருமன்காடு, வேப்பங்குளம், குளுமாட்டு சந்தி, கூமாங்குளம், மறக்கறம்பளை, நெளுக்குளம், சாம்பல்தோட்டம், பாரதிபுரம், விநாயகபுரம், இராஜேந்திரகுளம், நாகர் இலுப்பைகுளம், அறுகம் புல்வெளி, அவுசதாப்பிட்டிய, நவகம, பழையனூர், உளுக்குளம், சின்னத்தம்பனை, நேரியகுளம், இலுப் பைக்குளம், அழகாபுரி, முதலியார்குளம், சின்னசிப்பிக்குளம், முகததான்குளம், செட்டி குளம், வவுனியா வைத்திய சாலை, பூங்கா வீதி, சூசைப்பிள்ளையார்குளம், கொக்கெலிய, அக்போபுர, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, சுகாதார திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, ஓவியா விடுதி, S.V.R அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கார்கில்ஸ் பூட் சிற்றி, விமானப்படை முகாம் உப இல 01, மன்டெரின் ஆடைத்தொழிற்சாலை, வவுனியா இராணுவ முகாம், வவுனியா விமானப்படை இணைந்த பராமரிப்பு நிலையம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், Gowloom ஆடைத்தொழிற்சாலை, ஈரப் பெரியகுளம்இராணுவமுகாம், SLBC ஈரப்பெரியகுளம், கீர்த்தி அரிசி ஆலை, HP வீதி, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, UNHCR குருமன்காடு, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை - காதன் கோட்டம், நெளுக்குளம் நீர்ப்பாசன சபை, தந்திரமலை சந்தி (கஜசிங்கபுர இராணுவ முகாம்), வவுனியா பல்கலைக்கழகம், பம்பைமடு பல்கலைக்கழகம், நெளுக்குளம் தொழில் நுட்பக் கல்லூரி, விமானப்படை வேளாங்குளம், செட்டிகுளம் வைத்திய சாலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிகுளம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், சக்திகம மல்வத்து ஓயா இல 02, மெனிக்பாம் வலயம் 02 - Relief கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளத்திலிருந்து முருங்கன் வரை, முருங்கன் ஊடாக சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம் வரை, CECB, சிலாவத்துறை, சிலாவத்துறை கடற்படை முகாம், தேக்கம், நானாட்டான் பிரதேச சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

விநாயகர் கோயில் சந்நிதித் தெருவில் குடியிருப்பவர்களின் வாழ்க்கை "பிரகாசமடையாது" என்று எண்ணுவது பிழையான கருத்து. யாரோ ஒருவர் தெரியாமலும் புரியாமலும் கூறியதை கதானுகத நியாயமாக மக்கள் கூறிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே விநாயகர் சந்நிதித் தெருவில் குடியிருப்பவர்கள் அஞ்ச வேண்டியதில்லை. (தொடரும்)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பூஜை அறையில் தவிர்க்கவேண்டிய விடயங்கள்

வீட்டில் உள்ள அறைகளில் பூஜை அறை ஒரு முக்கியமான அங்கமாகும். அந்தவகையில் பூஜை அறையில் தவிர்க்கவேண்டிய சில விடயங்கள்

பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர் தெற்குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம்.

தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங்களை வைக்கவும்.

நிவேதனம் செய்த தேங்காயை சமையலில் சேர்த்து அந்த உணவை மறுபடியும் சாமிக்கு நிவேதனம் செய்யக்கூடாது. (தொடரும்)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## காமத்தைத் தூய்மைப்படுத்தல்

மனிதனுக்குத் தொல்லை கொடுப்பவைகளில் முக்கியமானதொனறு காமம.பலா அதை எதிாகொளள வேணடியதாயுளளது. காமம மனதைப பறறிக கொளகிறது. உடலைக களைபபடையச செயகிறது. புததியை மநதாககுகிறது. காமததிறகுப பணியும போது சோமபேறிததனத்தை (இயங்காத்தனத்தை) தருகிறது. காமம் அடககபபடும போது கோபததைத தருகிறது. காமம ஆரரம்ப காலத்திலிருந்தே இருக்கிற, முறையாகப் பயன்படுத்தப்படாத சக்தியே தவிர வேறெதுவுமில்லை. அதுவே முறையாகப் பயன்படுத்தப்படும் போது ஆர்வம், ஒளிரும சகதி, அறிவுககூாமை, அனபு என வெளிபபடுத்தப்படுகிறது.

**காமத்தைத் தூய்மைப்படுத்தி அன்பாக மாற்ற ஏதுவாக (காரணமாக) உள்ளவை யாவை?**

❖ விளையாட்டுத்தனம்- காமத்தின் பிடியில் உள்ளவர்கள், உண்மையாக விளையாட்டுத் தன்மையுடன் இருக்கமுடியாது. நீ உண்மையாகவே விளையாட்டுத் தனமுள்ளவனாக இருந்தால் அப்போது காமம் இல்லை.

❖ தாராளகுணம்- நீ இங்கு இருப்பது கொடுப்பதற்காக மடடுமே எனறும ந மிகவும தாராளகுணமுடையவன என்றும் உணரும் போது காமம் தூய்மையடைகிறது. காமம் எல்லாம் தனக்கு மட்டுமே என ஒருவரை நினைக்க வைக்கிறது. தாராள குணத்தைத் தருவதில்லை.

❖ மிதமான அளவு உண்பதையும் குறைத்து, குறைவான அளவு உணபது.

❖ இறப்பு நமக்கும் உண்டு என நினைவு கொள்வது.

❖ தெய்வத்தைக் காதலிப்பது.

❖ குளிர்ந்த நீரில் நீராடுவது.

❖ ஆக்கபூர்வமான அறைகூவல் (சவால்) களை மேறகொளவது.

# ஆண், பெண்களுக்கான வூசோ போட்டி முல்லைத்தீவு மாவட்டம் சம்பியன்




வடமாகாண ரீதியான அனைத்து மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான வூசோ போட்டியில் ஆண்கள், பெண்கள் இரு பிரிவிலும் முல்லைத்தீவு மாவட்டம் மாகாண ரீதியாக முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மாகாண மட்ட ஆண், பெண்களுக்கான வூசோ போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவில் 1 ம் இடத்தை பெற்றதுடன் முல்லைத்தீவு மாவட்டம் 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன் வவுனியா மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் பெற்று 2ம் இடத்தினையும் 3ம் இடத்தினை யாழ்ப்பாண மாவட்டம் 1தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தைப் பெற்று கொண்டது.

பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டம் 1 தங்கம், 1வெள்ளி, 1வெண்கலம் பெற்று 1 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டன. (க)

# பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அதிக பதக்கம் பெற்று மகாஜன அணி சம்பியன்



பாடசாலைகளுக்கு இடையிலான வடமாகாண தடகள போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி 28 பதக்கங்களுடன் 12 தங்கம், 11 வெள்ளி, 5 வெண்கலம் என 28 பதக்கங்களுடன் ஆண்கள் அணி 91 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தினையும் பெண்கள் அணி 157 புள்ளிகளை பெற்று முதலாமிடத்தினையும் பெற்ற அதேவேளை ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் மகாஜனா கல்லூரி 248 புள்ளிகளை பெற்று வடமாகாணத்தின் சம்பியனாகியது. (க)

# என் கடைசி மூச்சு உள்ளவரை இந்தியாவுக்காக பாடுபடுவேன்

## ஜடேஜா உருக்கம்



நியூசிலாந்து அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய வீரர் ஜடேஜா உருக்கமான டுவிட் ஒன்றை போட்டுள்ளார்.

நடைபெற்ற உலகக் கோப்பை தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் மிகவும் மோசமான தோல்வியை சந்திக்கவிருந்த இந்திய அணியை, தன்னுடைய அதிரடி ஆட்டத்தின் மூலம் வெற்றிக்கு அருகே கொண்டு சென்று திடீரென்று 77 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் டோனி முயற்சித்தும் எதிர்பாரதவிதமாக அற்புதமான ரன் அவுட்டால் பவுலியன் திரும்ப, இந்திய அணி தோல்வியை சந்தித்தது.

இந்நிலையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜடேஜா தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில்,

ஆதரவு தந்த அனைத்து ரசிகர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி, உங்களின் ஆதரவு தான் எங்களின் ஊக்கம், என்னுடைய கடைசி மூச்சு உள்ளவரை இந்திய அணிக்கு என்னால் என்ன கொடுக்க முடியுமோ அதை நிச்சயம் கொடுப்பேன் என்று உருக்கமாக கூறியுள்ளார். (க)

# யாழ். கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி த. பாலராஜ் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி புவனேந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா. இளம்பிறை ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

# வடக்கின் மென்பந்தாட்ட அரசன் மாபெரும் கிரிக்கெட் சமர்

மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் சுதந்திரராஜா செல்வராணி ஞாபகார்த்தமாக அவரது புதல்வர்கள் கண்ணன், சுரேன் அனுசரணையுடன் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மென்பந்தாட்ட தொடர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், வடமராட்சி கிழக்கு (யாழ் மாவட்டம்), வடமராட்சி மற்றும் தென்மராட்சி இணை (யாழ் மாவட்டம்), வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் இணை (யாழ் மாவட்டம்), தீவகம் (யாழ் மாவட்டம்), அணிகள் சைனிங்ஸ் இன் "வடக்கின் மென்பந்தாட்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 519 4152, 077 453 0111, 077 412 6496 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வல்வெட்டித்துறை, வல்வை உள்ளக விளையாடரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கி.மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநர் ம.தியாகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் எல். லக்சுமி காந்தன், கௌரவ விருந்தினர்களாக கே.தேவசிகாமணி, எஸ்.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் B பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து புத்தூர் மத்தி ஸ்ரார் அணியும் A பிரிவில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணியும் மோதவுள்ளன. (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# தோல்வி ஏமாற்றமளிக்கிறது; வெற்றியை நோக்கிப் பயணிப்போம்

## மோடி டுவிட்



நியூசிலாந்து அணிக்கு எதிரான உலகக்கோப்பை அரையிறுதிப் போட்டியில், இந்திய அணி போராடி தோல்வியுற்றது குறித்து பிரதமர் மோடி டுவிட் செய்துள்ளார்.

இந்திய பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், 'முடிவு ஏமாற்றமளித்தாலும், இந்திய அணி கடைசி வரை போராட்டக் குணத்தை வெளிப்படுத்தியது அருமை.

இந்தத் தொடர் முழுவதும் இந்திய அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு, பீல்டிங் என அனைத்திலும் சிறப்பாக செயற்பட்டது. வெற்றிகளும், தோல்விகளும் வாழ்க்கையின் அங்கம். எதிர்கால தொடர்களில் வெற்றி பெற இந்திய அணிக்கு வாழ்த்துக்கள் எனத் தெரிவித்துள்ளார். (க)

## அழுகிய நிலை...

கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டிலிருந்து நேற்று வியாழக்கிழமை காலை துர்நாற்றம் வீசுவதை அவதானித்த அயல்வர்கள், உள்ளே சென்று பார்த்தபோது அழுகிய நிலையில் சடலம் காணப்படுவதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். (ம-3,9)

## பாராளுமன்ற...

காரிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் இரகசியமான முறையில் சாட்சியம் பதிவு செய்யப்படவுள்ளது.

அரச புலனாய்வு பிரிவின் பிரதானி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, அதன் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வருண ஜயசுந்தர, பொலிஸ் பரிசோதகர் தரங்க பத்திரன ஆகியோர் இன்று சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை 9 மணியளவில், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பெரும்பாலும் ஊடகங்கள் அனுமதிக்கப் படாதென்றும், ஊடகங்களுக்கு குரல் பதிவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்தகவல்கள் தெரிவிக்கின்றன.(ம-3)

## அனைவரையும்...

னரும் இணை ந்தே உருவாக்கப்பட வேண்டும் என்று வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி முதலான கட்சிகள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டது.

குறித்த கூட்டணியில் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இணைந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் வினவியபோதே விக்னேஸ்வரன் குறித்த விடயத்தை தெரிவித்தார். (ம-3)

## அரசை கவிழ்த்து...

ஆதரவாக வாக்களிக்கு மாறு கோரி எனது வீட் டின் முன்னால் இன்று (நேற்று) மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ள னர்.

ஆனால், இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று சிந்திக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசு கடந்த அரசைவிட கொஞ்சம் பரவாயில்லை. கடந்த ஆட்சியின்போது இருந்ததைவிட அரசு மனித உரிமைகள் விடயத்தில் பரவாயில்லை. இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன செய்யப் போகிறோம். எனவே, நாங்கள் கவனமாகச் செயற்பட வேண்டும்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரி திருகோணமலையில் என் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடந்தது. எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லை. இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவளிப்பதை எமது மக்கள் விரும்பவில்லை. அரசு இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கூட்டு எதிரணியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வடக்கு மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை முதலில் முன்வைக்க வேண்டும். அரசுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து நாங்கள் சரியான தீர்மானம் எடுப்போம்" என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## மீண்டும் அமைச்சு...

இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த தீர்மானத்தை முஸ்லிம் உறுப்பினர்கள் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை அடுத்து ரிஷாத் பதியுதீன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து இவர்கள் அனைவரும் ஒன்றாக தமது அமைச்சுப்பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கப்பம் கொடுத்தே...

வெற்றிகொண்டார் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி கொண்டுவந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் சரியான ஒரு தீர்மானம் எடுத்திருந்தால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை நாம் வெற்றிகொண்டிருக்க முடியும்.

ஆனால் பிற்பகல் 4.30 மணியளவில் கல்முனை வடக்கு பிரதேசசபை விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் சம்பந்தன் உள்ளிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு இணக்கம் தெரிவித்திருந்தார்.

எழுத்துமூல வாக்குறுதிகளை அடுத்தே கூட்டமைப்பு அரசாங்கத்தை ஆதரித்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழமை போன்று கப்பம் கொடுத்தே நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொண்டார்.

ஆகவே இவர்கள் அரசாங்கத்தை கப்பம் மூலமாகவே காப்பாற்றியுள்ளனர். இவர்களுக்கு இல்லையென்றால் 119 வாக்குகள் கிடைத்திருக்காது என்றார். (ம-3)

## கூட்டமைப்பின்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறியதன் மூலம் அரசும், பிரதமரும் தோல்வியடைந்து விட்டனர் என தெரிவித்து. ஜே.வி.பி சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடைந்தது.

கடந்த இரண்டு நாள் விவாதத்தின் முடிவில், நேற்று மாலை நடந்த வாக்கெடுப்பில், ஜே.வி.பியின் பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 119 வாக்குகளும் கிடைத்தன.

பிரேரணைக்கு ஆதரவாக ஜே.வி.பி, மகிந்த அணி வாக்களித்தனர்.

எதிராக ஐ.தே.முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு வாக்களித்தனர்.

சிவசக்தி ஆனந்தன், மகிந்த சமரசிங்க, விஜேதாச ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (ம-3)

## எமது பிள்ளை...

சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அந்த சங்கத்தின் உறுப்பினரான ஆ. லீலாதேவி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'காணாமல் போன உறவுகள் தம்மிடம் சரணடையவில்லை எனவும் அது தொடர்பாக அரசாங்கத்திடமே கேட்க வேண்டும் எனவும் இராணுவ அதிகாரியொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நகைச்சுவையை வேறு எந்த ஒரு நாட்டிலும் கேட்க முடியாது. இராணுவம் வேறு அரசாங்கம் வேறு என்று கூறக்கூடிய விடயம் அல்ல. அத்துடன் யுத்த காலத்தில் முன்னரங்கில் நின்றது அரசாங்கத்தின் இராணுவமே. நாங்கள் எங்கள் பிள்ளைகளை ஒப்படைத்தது இராணுவத்திடமே.

இவ்வாறான நிலையில் இராணுவ அதிகாரி தங்களிடம் சரணடையவில்லை என கூறுவது கேலிக்குரியது மட்டுமல்ல இலங்கை மக்களை முட்டாளாக எண்ணி கூறிய கருத்தாகும். இவ்வாறான கருத்தை எமது மக்கள் பிரதிநிதிகளோ அல்லது எமக்காக போராடுவதாக கூறிக் கொள்ளும் அமைப்புக்களோ கேள்விக்குட்படுத்தவுமில்லை கண்டிக்கவுமில்லை.

நாம் இராணுவத்திடமே பிள்ளைகளை கையளித்தோம். எனவே இராணுவமே இதற்கு பதில் சொல்லவேண்டும். அத்துடன் இந்த அரசாங்கமும் நாட்டுத்தலைவரும் எமக்கான பதிலை தரவேண்டும். அவர்கள் பதில் தராத பட்சத்திலேயே தற்போது நாம் சர்வதேசத்தின் உதவியை நாடி நீதியை கோருகின்றோம்.

ஆகவே சர்வதேசமும் இவ்வாறான விடயங்களில் கண்டும் காணாமல் இருப்பதை விடுத்து இதில் தலையிட்டு தீர்வினை வழங்க முன்வரவேண்டும். எமது போராட்டத்திற்கு உதவுவதாக பல அமைப்புக்களும் வேறு பலரும் கூறிக் கொண்டாலும் எமது போராட்டம் தனித்துவமானது எந்த கட்சியும் சாராதது.

நாமாக முடிவெடுத்து நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். இறுதியாக ஒரு தாய இருக்கும் வரை எமது போராட்டம் தொடரும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு முன் கொண்டு செல்லும் வரை தொடரும்' என குறிப்பிட்டுள்ளார்.

(ம-250, 299)

## அவநம்பிக்கை...

கல்முனை விவகாரத்தில் சாதகமான பதில் வழங்கப்படாவிட்டால் கூட்டமைப்பு அரசுக்கு எதிராக வாக்களிக்கும் என அழுத்தம் திருத்தமாக கூட்டமைப்பு தெரிவித்ததையடுத்து, இன்றே முறைப்படியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பிற்கு வாக்குறுதியளித்தார்.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதெனில், உறுதியான உத்தரவாதங்கள் தேவையென கூட்டமைப்பின் எம்.பிக்கள் வலியுறுத்திய தன் அடிப்படையில் நேற்று மாலை 5 மணியளவில் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பு எம்.பிக்களிற்கிடையில் சந்திப்பொன்று நடந்தது.

இதன்போது நிதியமைச்சர் மங்கள சமரவீர, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவும் உடனிருந்தனர். இன்றே முறைப்படியான நடவடிக்கைகள் மேற்கொண்டு, கணக்காளரை நியமிப்பதற்கு இதன்போது வாக்களிக்கப்பட்டது.

அத்துடன் அமைச்சின் செயலாளர்களிற்கும், கணக்காளர் நியமிக்கப்பட வேண்டியுள்ளதை அறிவித்தார்.

அத்துடன், கணக்காளர் நியமிக்கப்பட்டு கல்முனை பிரதேச செயலகத்திற்கு தனியான வங்கிக்கணக்கு ஆரம்பிப்பதற்கு திறைசேரி செயலாளரின் அனுமதி தேவையாக இருந்தது. நேற்று மாலை 6 மணிக்கு மங்கள சமரவீர அதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்தார்.

இதேவேளை, கல்முனை விவகாரத்திற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்த முஸ்லிம் காங்கிரசின் ஹரீஷ் எம்.பியும் பிரதமர் செயலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். முஸ்லிம் பிரமுகர்கள் அடங்கிய குழுவொன்றுடன் அவர் வந்திருந்தார். அந்த குழுவுடனும் பேச்சு நடத்தப்பட்டு, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்க அவர்களின் ஆதரவும் பெறப்பட்டது.

முதற்கட்டமாக கணக்காளரை நியமித்து, அடுத்த கட்டமாக எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் இரண்டு விடயங்களில் நேற்று கூட்டமைப்பின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கன்னியா வெந்நீர் ஊற்றில் இன்று (நேற்று) பிள்ளையார் ஆலயம் இடிக்கப்படுவதாக வெளியான செய்தியை பிரதமரிடம் குறிப்பிடப்பட்டது. இதையடுத்து, தொலைபேசி வழியாக அந்த பணிகளை உடனடியாக நிறுத்தும்படி பிரதமர் உத்தரவிட்டார்.

ஓமந்தையில் சிங்கள பகுதிகளை உள்ளடக்கி தனியான சிங்கள பிரதேச செயலகத்தை அமைக்க அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வந்தது. அதை உடனடியாக நிறுத்தும்படி கூட்டமைப்பு வலியுறுத்தியது. உடனடியாக அந்த பணிகளையும் நிறுத்துவதற்கு பிரதமர் உடன்பட்டார். (ம-3)

## வாக்குறுதியை...

கங்கள் நூறுவீதம் உண்மையாகும். என்றாலும் அரசாங்கத்துக்கு கொடுத்த வாக்குறுதியை பாதுகாப்பதற்காக மனசாட்சிக்கு விரோதமாக எதிர்த்து வாக்களிக்க தீர்மானித்தேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சி என் மீது முன்வைத்திருக்கும் பத்து குற்றச்சாட்டுக்களில் ஒன்றையேனும் நிரூபித்தால் நான் எனது அரசியலில் இருந்து விலகுவேன் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று மக்கள் விடுதலை முன்னணியினால் அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவந்திருந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இரண்டாம்நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் இந்த சபையில் இனவாதத்தை கக்கி வருகின்றார். கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களை திருப்ப முயற்சிக்கின்றார். ஆனால் தமிழ் மக்கள் இவரின் பேச்சைக்கேட்க முட்டாள்கள் அல்ல. எமக்கிடையே இருக்கும் பிரச்சினையை பேசித்தீர்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் அவர் ஷாபி வைத்தியர் மீது மேற்கொண்ட குற்றச்சாட்டு பொய் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் நீதிமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்து அவர் எதிர்பார்க்கும் தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என எதிர்பார்க்கின்றார். இது அவரின் மடமைத்தனமாகும்.

இதுபோன்ற பல இனவாத கருத்துக்களை தனது அரசியலுக்காக அவர் தெரிவித்து வருகின்றார் என்றும் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 1551 | திகதி: 2019/07/11

ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கங்கள்: 01 14 25 33

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி: 2019.07.11 | சீட்டிழுப்பு இலக்கம்: 2175

ஆங்கில எழுத்து: W | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 47 48 67

தேசிய லொத்தர் சபை

### நீரோகா லக்ன ஜய

திகதி: 2019/07/11 | சீட்டிழுப்பு இலக்கம்: 0570

லக்கினம்: மீனம் | வெற்றி இலக்கங்கள்: 05 20 30 33

### மஹஜன சம்பத

திகதி: 2019/07/11 | சீட்டிழுப்பு இலக்கம்: 3957

ஆங்கில எழுத்து: N | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 3 2 8 7 3

தேசிய லொத்தர் சபை

# வட மாகாணசபை நிர்வாகத்தில் இரு செயலாளர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் மேலும் இரண்டு செயலாளர்களுக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண பேரவைச் செயலகத்தின் செயலாளராக திருமதி ரூபினி வரதலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல் சமூக சேவைகள், கூட்டுறவு , உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக ஆர்.வரதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நியமனக் கடிதங்கள்வழங்கப்பட்டதுடன் இந்த நியமனங்கள் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் கடந்த ஜனவரியில் பதவியேற்ற பின்னர், ஜூலை முதலாம் திகதி தொடக்கம் ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் மாற்றப்பட்டனர். இந்த நிலையில் மேலும் இரண்டு செயலாளர்களுக்கான மாற்றம் நேற்று வழங்கப்பட்டுள்ளது. (ம-3)


வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

**எமரல்ட் ஐல்**

License No. 2268

முற்றிலும் இலவசமாகத் தரும்

சவுதி அரேபிய வேலைவாய்ப்பு



**குழாய் பொருத்துநர்**

சம்பளம் ரூ.56,400 + OT

வயதெல்லை 21 – 35

ஓரளவு பிளம்பிங், எலைக்ரீஷியன் A/C டெக்னீஷியன். அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**இலவசம்**

- விசா, டிக்கட், பியூரோ கட்டணம்
- உணவு, தங்குமிடம், மருத்துவம், சலவை
- ஒவ்வொரு வருடமும் நாடு வந்து திரும்புவதற்கான விமானச்சீட்டு (21 நாள் சம்பளத்துடனான விடுமுறையுடன்)

077 00 38 215, 0777 324 004, 021 221 9 221

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

(C-6934)



**DMI**

**Stanley Rd, Jaffna.**

**A/L - 19 Batch**

**விவசாய விஞ்ஞானம் 108**

முன்னோடிப்பரீட்சையும், வழிகாட்டல் செயலமர்வும்

Exam : Part I - 14/7, 3 pm - 5 pm
Part II - 16/7 10am - 1 pm

V.SASI ஆசிரியர் 20/7, 21/7 } 2 pm - 5 pm

(C-6920)



FALC FRENCH LANGUAGE CENTRE

**பிரெஞ்ச்**

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 22.06.2019 சனி காலை 10 மணி

181, பிரதான வீதி. நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 24.06.19 3.30 pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-6659)



**துரித தபால்கள் பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 600/=
Germaney - 700/=
France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Rd
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.

0777 554 528

(C-6868)



**Techno World**
**தொழில்நுட்பக் கல்லூரி**
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

**A/L 2019**

பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான

**விஷேட செயலமர்வு**

ஆரம்பம் காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 12,13,14 | பொறியியல் தொழில்நுட்பவியல்<br>உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 15,16 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | I.C.T விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, சித்திரம், இலகுகணிதம் |

குறிப்பு

- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகுரீதியாக தெளிவுபடுத்தப்படும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி.
- வினாத்தாள்களும் அதற்குரிய விடைகளும், விளக்கங்களும் வழங்கப்படும்.
- முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே கையேடுகள் வழங்கப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

**அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்**

**தொடர்புகளுக்கு : 077 01 75 346**

(C-6947)



கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின்



வர்த்தக கையியக்க மெசின்



வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

(8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இவ் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)



**நெல்லியடியில் இம் மாதம் நடக்கவுள்ள வட மாகாண M.A தேர்வுக்கான விசேட தொடர் கருத்தரங்குகள்**

13,14,20,21 ஆம் திகதிகளில் அனுபவம்மிக்க வளவாளர்களால் மாதிரி வினாப் பத்திரங்களுடன் நடைபெறும்

உயர் கல்லூரி, நெல்லியடி.
தொடர்பு : 0774350958

(C-6948)



**YAMAHA**

**வழங்கும் சிறப்பு சலுகை**

52,000/= வரை விலைக்கழிவு



முற்கொடுப்பனவாக வெறும் 39,500.00 மாத்திரமே செலுத்தி யமஹா ஸ்கூட்டர் ஒன்றினை இன்றே கொண்டு செல்லுங்கள்
(இச்சலுகை குறித்த கையிருப்புகளுக்கு மட்டுமே)

உங்கள் பழைய மோட்டார் சைக்கிளை கொடுத்து புதியமோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்ளலாம்

**இன்றும் நாளையும் மாத்திரம்**

மருதனார் மடம் சந்தி, சுன்னாகம்.

எமது காட்சியறை : - Digital Electornics
62/16, Stanley Road, Jaffna.
0776623824 / 0212224040

(C-6740)



# கண்ணீர்க் காணிக்கை

எமது பொது அமைப்புக்களின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உறுதுணையாகவிருக்கும்
"கலைமாடக்கோன்" "அறக்கொடைச்செம்மல்"
உயர்திரு. **சண்முகம் சிவஞானம்**
(பிரபல வர்த்தகப் பிரமுகர்)
அவர்களின் அன்பு மாமியார்

திருமதி **பாக்கியம் பொன்னுத்துரை**



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !!
ஓம் சாந்தி !!!

75/2, செட்டித்தெரு, நல்லூர்.

நல்லூர் முருகன் சனசமூக நிலையம்
நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

(9553)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I மேல்மாகாணம்

❖ கீழுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி 1 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடைகளைத் தெரிக.


1 ஆம் 2ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

01.




1 2 3

02.



1 2 3

03. அடுத்து வரவேண்டிய உருவினைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.






❖ கீழுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

கண்ணைப் போல பயிர்களை
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

04. இப்பாடலில் வந்துள்ள உவமானச் சொல் எது?
1. கண் 2. பயிர் 3. உணவு

05. உடல் வருந்தல் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
1. உடற்பயிற்சி செய்தல் 2. உடலை அசைத்தல் 3.கஷ்டப்படுதல்.

❖ கீழுள்ள உருவை அவதானித்து 6 ஆம், 7 ஆம் வினாக்களுக்கான விடையைத் தெரிக.



06. உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் முழு உருவின் பின்னம்
1. 3/5 2. 2/10 3.4/5

07. உருவில் நிறந்தீட்டப்படாத பகுதியின் முழு உருவின் பின்னம்
1.3/5 2.1/5 3.8/10


❖ 8 ஆம், 9 ஆம் வினாக்களில் வழங்கப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் பொருத்தமற்ற சொற்கூட்டத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க

08. 1. கனிந்த, அழுது , ஓடிய
2. பறந்த, ஓடி, சிரித்த
3. விழுந்த, குனிந்து, சரிந்து


09. 1. கலகல, சலசல, சிறு சிறு
2. பெரிய பெரிய , துண்டுதுண்டு, மெல்ல மெல்ல
3. நற நற, சரசர , பளபள

❖ 10ஆம், 11 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

10.




11.




❖ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

12.




1.36 2.27 3.12

13.




1.12 2.21 3.5

❖ கீழுள்ள பிரசினத்தில் அடைப்புக்குறிக்குள் வரவேண்டிய பெறுமானத்தையுடைய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

14. 14+ (15+20) = 49

1. 16+14 2. 22+13 3. 25+25

15. 6+(3×7) = 37

1. 11+12 2. 25-4 3. 12÷2

16. கீழே கொடுக்கப்பட்டுள்ள நெற்பயிர்ச்செய்கையின் படிமுறைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

A-அறுவடை செய்தல்
B-களை பிடுங்குதல்
C-சூடு மிதித்தல்
D-நெல் விதைத்தல்
E-வயலை உழுது பண்படுத்தல்


1. CBADE 2.EDBAC 3.EBACD

17. பின்வரும் வாக்கியங்களில் கருத்துப்பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக
1.தேன் ஒரு ஔடத பானமாகும்
2.மாலையில் ஆதவன் உதிப்பான்
3.எமது நாட்டிற்றுத் தெற்கே இந்தியா அமைந்துள்ளது.

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I மேல்மாகாணம்

18. பின்வரும் உருக்களில் இரண்டு உருக்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்தவை. இவற்றில் பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக




19. அமல் ஓர் எண்ணை நினைத்தான் . அவ்வெண்ணை 6 ஆம் ஆல் பெருக்கி 3 ஐக் கூட்டினால் வரும் விடை 21 ஆகும் . அவன் நினைத்த எண் யாது?
..............................

❖ ஒரே கருத்துடைய இரண்டு சொற்களைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

20. புத்தகம், வாசிப்பு , புத்தகசாலை , நூல்


21. மலை, பள்ளம், மேடு, குன்று

22. சுகதேகி , நோய் , உடல்நலம் , வியாதி

23. கண்ணாடியின் முன்னால் பிடித்து பார்க்குமிடத்து வித்தியாசமின்றி அதே எழுத்து வடிவில் காணக்கூடியதைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1.AHG 2.VXY 3.MOR


❖ பிரசினங்களை விளங்கிக் கொண்டு பின்வரும் 24 ஆம்.25 ஆம் ஆம் வினாக் களுக்கான விடையைத் தெரிவு செய்க



24. ○ இனால் குறிப்பது.
1. 4 2. 9 3. 8

25. ○÷2 இனால் குறிக்கப்படுவது·
1.2 2.4. 3.8

❖ பின்வரும் உருவை அவதானித்து வினவப்படுட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க



26. வட்டத்திற்கு மட்டும் உரித்தான பூக்களின் எண்ணிக்கை யாது?
1.4 2.2 3.1

27. செவ்வகத்திற்கு மட்டும் உரித்தான பூக்களின் எண்ணிக்கை யாது?
1.4 2.6 3.2

28. முக்கோணத்திற்கும் வட்டத்திற்கும் மட்டும் உரித்தான பூக்களின் எண்ணிக்கை யாது?
1.1 2.3 3.2

29. மூன்று வடிவத்திற்கும் உரித்தான பூக்களின் எண்ணிக்கை யாது?
1.2 2.3 3.4

❖ காரணமும் காரியமும் கொண்டமைந்த வாக்கியத்தை "✓" எனவும் அவ்வாறற்ற வாக்கியங்களை "✕" எனவும் முன்னாலுள்ள அடைப்பிற்குள் அடையாளமிடுக.

30. தேசத்தைச் சுற்றி வேலி அடைத்தால் வாயைச் சுற்றி வேலி அடைக்க வேண்டியதில்லை. ( )

31. மேலே பாய்ந்தால் கீழே விழுவர் ( )


32. புரளும் கல்லில் பாசியராது. ( )

பின்வரும் தொடருக்கான கருத்தை எழுதுக


33. அந்தப்புரம்.........................................

34. விதவை.................................................

❖ 35 ஆம், 36 ஆம் வினாக்களுக்கு சரியான வசனத்தைத் தரக்கூடிய குறியீடுகளை இனங்கண்டு கோடிடுக. குறியீடுகளுக்கான சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.




35. வேடன் காட்டுக்குச் சென்றான்.




36. வண்ணத்துப்பூச்சி தேன் குடிக்கும்





37. கமல் ஹிமாலியின் தம்பியாவார். ஹிமாலிக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். கமலுக்கு எத்தகை சகோதரர்கள் உள்ளனர்.?
1. இருவர் 2. மூவர் 3. நால்வர்

38. நகரத்திலிருந்து நகரத்திற்கான தூரம் 60 ஆகும் 5 நிமிடத்திற்கு 3 வேகத்தில் பயணம் செய்து செய்யக்கூடிய மோட்டார் வண்டி பயணத்தை நிறைவு செய்ய செலவாகும் நேரம் யாது?
1. 1 மணித்தியாலமும் 20 நிமிடமும்
2. 1 மணித்தியாலமும் 40 நிமிடமும்
3. 1 மணித்தியாலமும் 10 நிமிடமும்

39. ஒரு நாள் நான் பேருந்து சாரதியின் இருக்கைக்குப் பின்னாலுள்ள ஆசனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது எனது வலதுகைப் பக்கத்தில் சூரியன் உதித்து வருதைக் கண்டேன். ஆகவே பேருந்து செல்லும் திசை யாது?
1. தெற்கு 2. வடக்கு 3. மேற்கு

40. பின்வரும் உருவில் காணப்படும் பூவை வெட்டுவதற்காக சதுர வடிவிலான கடதாசியை சமச்சீராக எத்தனை தடவைகள் மடிக்க வேண்டும்.



1. 2
2. 3
3. 4

## 10.07.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

பகுதி-IIவிடைகள்

01. 1. பத்திரிகை 2. எழுச்சி 3. துயில்வோர். 4.நீ 5. பார், உலகம்
6. கதிர்+ ஒளி 7. பெருமை+ அறிவாளர்
02. அ)1. கண்காட்சி 2. விளக்கு
ஆ)1. தொடுவாம் 2. சுயநலவாதி/தன்னலவாதி 3. வரட்சி
03. 1. உங்களது பெயர் என்ன? 2. உங்களது வயது என்ன?
04. 1.Please listen to me
05.1.Flower 2.penil
06.மகே கம பானதுர 07.1. எனக்கு ஒரு பேனை தரவும்
081.ஏர் 2.நயனம் 3. சமுத்திரம்
09. 1. பிடிவாதம் 2. இரவும் பகலும் 3. உண்மைத் தன்மை
10.................... ................ ..................(பொருத்தமான வாக்கியங்கள்)
11. செவ்வரத்தம்பூ 12. கத்தரி 13. தொலைக்காட்சி 14. காலாவதியாகும் திகதி
15. சிலந்தி 16.தூக்கணாங்குருவி 17. கங்குன் 18.மட்பாண்டத்தொழில்
19. கனடா 20.யாழ்ப்பாணம் 21. களுத்துறை 22. தமிழர்
23. கவரச் சுத்தியல் 24. கம்பளித்தையல் 25. செங்கண்மாரி
26.மகாசேனன் 27.பலாக்காய் 28.பத்திரிகை 28.பச்சோந்தி
30.உணவு சமைக்கும் போது 31. கரப்பந்தாட்டம் 32.3
33.தேங்காய் எண்ணெய் 34. புகையிரதம்
35. களுத்துறை 36.ஆந்தை 37.சதுரங்கம்
38. குளிர்சாதனப்பெட்டியில் வைத்தல்
39. இளநீர் 40.வௌவால் 41.9090 42.2480, 2490 43. 1) 630 2) 036
44. ⊞ 1/2 45.ரூபா 16.00 46.ரூபா 180.00
47. 500 மீ.லீ 48. 35 வயது
49. அ. மு.ப 1 மணி 30 நிமிடம் ஆ. மு.ப.9 மணி 30 நிமிடம்
50.அ.சதுரமுகி ஆ.8
51. அ.கிழக்குத்திசை ஆ.5 மீற்றர் 52. 9 53.ரூபா 50.00 54.5 55.தீண்ட ஒண்ணாதார்.
56. ஆபிரகாம் லிங்கன் 57.நற்றவ வ்வானில் நனி சிறந்தனவே
58. கொத்தியது. 59. தண்டித்தார். 60. அழகு